2020 - இதழ் 05 இலவசம்

## வைகாசி - 2020

# உள்ளான மனிதன்

### மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம் 2020 - இதழ் 05

**இயேசு சொன்னார்:**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிறேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909

(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

**2020 - இதழ் 05**


## 4 உமது கிருபை நல்லது

மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது. புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது.

## 6 பிந்தின ஆதாம்

மனிதர்கள், தங்கள் வாழ்க்கையில் சுகமும் சமாதான மும் பெருகி இருக்கும் காலத்திலே, தேவனுடைய எச்சரிப்பை தள்ளிவிடுகின்றார்கள். தேவன் விலக்கி வை என்று கூறும் காரியங்கள் தங்களுக்கு தேவை என்று எடுத்துக் கொள்கின்றார்கள்.

## 11 பிரசங்கக் குறிப்புகள்

மனிதர்கள் வாழ்க்கையிலே நெருக்கப்பட்டு ஒடுக்க ப்பட்டு போகும் போது அவர்கள் சிறுமைப்படுத்தப்ப டுகின்றார்கள். அதிலிருந்து மீண்டு கொள்வது அவர் களுடைய பெலத்திற்கு மிஞ்சின காரியம். ஏனெனில் அவர்கள் வாழ்க்கை பல அழுத்தங்களால் அமுக்கப் பட்டிருக்கின்றது.

## 13 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


**கிரேஸ் (ற்)ரபனக்கல்**


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 13ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

... வைகாசி 5, 9, 11, 12, 14, 15, 21, 22, 25, 26, 29, 30

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

... வைகாசி 1, 2, 3, 4, 9, 11, 12, 14, 15, 17, 21, 22, 25, 26, 29, 30

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**

... வைகாசி 1, 9, 14, 17, 18, 23, 26, 27

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

... வைகாசி 1, 3, 8, 11, 12, 14, 15, 18, 21, 27, 29

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**

... வைகாசி 3, 8, 13, 15, 17, 18, 23, 25, 27

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**

... வைகாசி 4, 6, 10, 13, 16, 20, 24, 28, 30

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**

... வைகாசி 6, 7, 9, 10, 11, 18, 27, 31

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**

... வைகாசி 2, 4, 5, 6, 8, 10, 11, 16, 20, 24, 27, 31

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

... வைகாசி 2, 13, 24, 26, 27, 30, 31

**பொறுமையோடு காத்திருங்கள்**

... வைகாசி 1, 5, 7, 10, 12, 14, 15, 16, 18, 21, 25, 26, 29

**தேவ நீதி வெளிப்படும்**

... வைகாசி 9, 10, 14, 16, 18, 25

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

... வைகாசி 4, 5, 6, 7, 8, 12, 19, 22, 23, 24, 28, 31

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

... வைகாசி 3, 4, 20, 30

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

... வைகாசி 4, 6, 8, 14, 17, 19, 23, 28

gtachurch.ca

# உமது கிருபை நல்லது

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

மனிதகுலமானது மிகப்பெரிதான சாவாலை இன்று எதிர்நோக்கியுள்ளது. இருபத்து நாலு மணிநேரமும் ஓயாமல் இயங்கிக்கொண்டிருந்த ஸ்தாபன ங்கள் சந்தடியின்று ஓய்ந்துபோயுள்ளன. உலகமும் ஸ்தம்பிதமடைந்த நிலையிலிருக்கின்றது.

இன்று இராஜ்யங்களின் புயபலமும் பொருட்பலமும் பலவீனப்பட்டு இரு ப்பதை காண்கின்றோம். யுத்தங்களை நாம் இன்று காணவில்லை, இரத்தம் சிந்துதலும் நடைபெறவில்லை. பலவான்களின் பலத்த ஆயுதங்கள் ஓய்ந் துபோய் களஞ்சியங்களில் அடைந்து கிடக்கின்றன.

ஆயினும் சடுதியாய் பஞ்சகாலம் சூழ்ந்து நிற்கின்றது. பசியிலும் பட்டி னியிலும் அழுபவர்களின் சத்தம் அங்காங்கு ஓலிப்பதை கேட்கின்றோம், கேள்விப்படுகின்றோம். அன்பானவர்களை இழந்த அநேக குடும்பங்களின் வேதனைகள் எங்கும் கேட்க்கின்றன. இப்படியே இந்நிலையை இன்னமும் விபரித்துக்கொண்டே போகலாம்.

மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது. புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந் தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்று பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள வார்த்தைகளிலே இவை யாவும் அடங்குகின்றதாயுள்ளது.

ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது, என் உதடுகள் உம்மைத் துதி க்கும். என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன் என்று பரிசுத்த வேதாகமத்திலே (சங். 63:3) தேவ பக்தன் கூறியுள்ளதை வாசிக்கின்றோம்.

இந்த உலகத்தில் நாம் காணும் எல்லாவற்றைப் பார்க்கிலும் தேவனுடைய கிருபையே சிறந்தது.

மனிதர்களின் செயல்கள் நிலையற்றவை. அவை சீக்கிரத்தில் மாறிப்போய் விடும். தேவனோ நல்லவரும் மாறாதவராயுமுள்ளார். அவரது கிருபை என்றுமுள்ளது. அதினாலே அவரது கிருபை ஜீவனைப்பார்க்கிலும் நல்லதா யுள்ளது.

ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது என்று சொல்லுவதன் கருத்து என்ன?

இந்த பூமியிலே நான் வாழும் வாழ்வை இழந்து போகவேண்டி வந்தாலும், தேவனே உமது கிருபையை நான் இழந்து போகாமல் இருப்பேனாக என் பதாகும். இவ்வுலகிலுள்ள நினைவுகளும், எண்ணங்களும், நாம் காணும் காட்சிகள் யாவும் ஒருநாளிலே முடிவுற்றுப் போகும். ஆனால் தேவகிரு பையோ எப்போதும் மாறாததாய் எம்மைத் தாங்கி வழி நடத்துகிறதா யுள் ளது.

தேவனுடைய வார்த்தைகள் ஒருபோதும் ஒழிந்து போவதில்லை. இன்றைய நாட்கள் அதை மேலும் உறுதிப்படுத்துவதாயுள்ளன. கர்த்தரை தேடுங்கள் அவர் சமூகத்தை நித்தமும் வாஞ்சியுங்கள். மனிதர்களுக்கு நாசியில் சுவா சத்தை வைத்தவரைத் துதியுங்கள். அவரது கிருபையை நாடுங்கள்.

இன்றைய நாட்களிலே மனிதகுலத்தின் ஆரோக்கியத்திற்காக முன்னின்று போராடும் அனைவருக்காகவும் ஜெபியுங்கள். விஷேசமாக

- வைத்தியர்களுக்காவும் அவர்கள் குடும்பங்களுக்காகவும்
- வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிமாருக்காகவும் அவர் கள் குடும்பங்களுக்காகவும்
- வைத்தியசாலையில் கடமையாற்றும் மற்றய ஊழியருக்காகவும் அவர்கள் குடும்பங்களுக்காகவும்
- மற்றும் முன்னணி (frontline workers) ஊழியருக்காகவும் அவர் கள் குடும்பங்களுக்காகவும்
- நாட்டை ஆளும் தலைவர்களுக்காகவும் அவர்கள் குடும்பங்களு க்காகவும்
- நாட்டின் அதிகாரிகளுக்காகவும் அவர்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள், அவர் இருதயம் நொறுங்குண்ட வர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார். தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரி யமாயிருக்கிறார். நாம் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் அவர் நம்மை உயி ர்ப்பிப்பார்.

## கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

gtachurch.ca

# பிந்தின ஆதாம்

ஒரு தனியார் ஸ்தாபனத்திலே, செயற்திட்டங்களை ஒழுங்குபடுத்தும் மேற்பார்வையாளராக கடமையாற்றிவந்த உத்தியோகஸ்த்தருக்கு, அரச இலாகா ஒன்றில் வேலை கிடைத்ததால், தன் பொறுப்பிலிருந்து ராஜி னாமா செய்து, முன்குறித்த தவணையில், அந்தத் தனியார் ஸ்தாப னத்திலிருந்து விலகிக் கொண்டார். அந்த உத்தியோகஸ்த்தர் கடந்து சென்ற சில கிழமைகளுக்குள், அவர் முன்பு வேலை செய்த தனியார் ஸ்தா பனத்திலே சில குழப்பங்கள் ஏற்பட்டது. தனியார் ஸ்தாபனத்தின் இயக்குனர், நடைபெற்ற செயற்திட்டங்களை ஆராய்ந்து பார்த்த போது, அங்கே சில குறைகளை கண்டு கொண்டார். அந்த செயற்திட்டத்தில் வேலை பார்த்து வந்த குழுவினரிடம் அதைக் குறித்து வினாவினார். அக் குழுவினரோ, எல்லாக் குறைகளையும் உத்தியோகத்திலிருந்து விலகி சென்ற அந்த மேற்பார்வையாளரின் தலையில் போட்டுவிட்டார்கள். "எங்கள் ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டிருக்கும் இந்த பின்னடைவுக்கு அவர் தான் காரணம்" என்று செயற்திட்டத்தின் முகாமையாளரும் திட்டமாக கூறி, தப்பித்துக் கொண்டார்.

பொதுவாக மனிதர்கள் மத்தியிலே, ஒருசாரார், தாங்கள் செய்த குற்ற ங்களை, எந்த சலனமுமின்றி, இன்னுமொருவர் மீது சுமத்தி விடுவார்கள். இன்னுமொரு சாரார், மற்றவர்கள் மேல் குற்றத்தை சுமாத்தாவிடினும், தங்களில் குற்றங்கள் ஏதும் இல்லை, ஆனால் மற்றய மனிதனால்தான் நான் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டேன் என்று கூறிக் கொள்வார்கள். இவர்கள் தங்கள் தவறான செய்கைகளை நியாயப்படுத்துகின்றவர்க ளாயிருக்கின்றார்கள். கருப்பொருளாவது, தங்கள் நிலையை சற்றும் ஆராய்ந்து பார்த்து, குற்றங்களை ஏற்றுக் கொள்வது மனிதர்களுக்கு மிகவும் கடினமான செயலாக இருக்கின்றது.

இந்த சுபாவமானது, மனிதர்களிடத்தில் நேற்றோ இன்றோ தோன்றிய சுபாவம் அல்ல. தேவனாகிய கர்த்தர் இந்த பூமியையயும் அதிலுள்ள யாவையும் தம் வார்த்தையால் சிருஷ்டித்து, மனிதனை ஆணும் பெண்ணு மாக உருவாக்கி, பூமியையும் அதிலுள்ளவைகளையும் ஆண்டு கொள் ளும்படி அவர்களை ஆசீர்வதித்தார். எல்லா நன்மையும் அவர்களுக்கு உண்டாயிருந்தது. தேவன் தாமே அவர்கள் மத்தியிலே உலாவி வந்தார். அவர்கள் தங்கள் மேன்மையை இழந்து போகாதபடிக்கு, அவர்கள் வசித்து வந்த ஏதேன் என்னும் தோட்டத்தின் மத்தியிலுள்ள ஒரு விரு ட்சத்தின் கனியைக் குறித்த எச்சரிப்பை அவர்களுக்கு வழங்கினார். நன்மை தீமை அறியத்தக்க அந்த விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண் டாம் அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். (ஆதியாகமம் 2:17). ஒரு நாள் சத்துருவானவன் ஸ்திரியாகிய ஏவாளோடு பேசி, அவளை வஞ்சித்தான். ஏவாள், தேவனாகிய கர்த்தருடைய வார் த்தைக்கு கீழ்ப்படியாமல், சத்துருவானவனின் வஞ்சிக்கும் வசீகரமான வார்த்தைக்கு கீழ்ப்படிந்தாள். தேவன் எதை விலக்கி வைத்தாரோ, அவள் அதை உட்கொண்டாள். அத்தோடு, தன் புருஷனாகிய ஆதாமிற்கும் அதை கொடுத்தாள். அவனும் தேவன் சொன்ன வார்த்தைக்கு விரோத மாக பாவம் செய்தான்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு அவன், ஆம் புசித்தேன் என்று தன் குற்றத்தை ஏற்றுக் கொள் வதற்கு பதிலாக, “என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன்” என்றான். அதாவது, முதலாவதாக, நீர் தந்த ஸ்திரியானவள் என்று தேவன்மேல் குற்றத்தை சாட்டினான், இரண்டாவதாக, ஸ்திரியானவளே இதை எனக்கு கொடுத்தாள், ஆதலால் நான் புசித்தேன் என்று ஏவாளை குற்றம் சாட்டினான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். அதற்கு அவள் நான் உம்முடைய வார்த்தையை கேட்காமல் வஞ்சிக்கப்பட்டேன் என்று கூறுவதற்கு பதிலாக “சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்.” அதாவது தங்களுடைய குற்றங்களை ஏற்றுக் கொள்ளாமல், தங்களை நியாயப்படு த்தும் வழிகளை தேடும் சுபாவமானது, மனிதன் பாவம் செய்த நாளிலே (தேவனாகிய கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போன நாளி லே) உண்டானது. அந்த சுபாவமானதே, ஆதாம் ஏவாள் வழி தோன்றிய மனித குலத்தின் “ஜென்ம சுபாவமாக” இருந்து வருகின்றது.

ஒரு பட்டணத்திலே வாழ்ந்து வந்த வயதான ஐயா ஒருவர், தன் மோட்டார் வண்டியை, மிகவும் அவதானமாக ஓட்டிச் சென்று கொண்டி ருந்த வேளையில், சாலை விதிகளை மீறி, எதிர்ப்பக்கமாக வேகமாக வந்த வாகனம் ஒன்று இந்த ஐயாவின் வாகனத்தோடு மோதியது. தன க்கோ தன்னுடன் சென்று கொண்டிருந்த தன் மகனுக்கோ, எந்த ஆபத் தும் ஏற்படவில்லை என அறிந்த அந்த ஐயா, துரிதமாக வாகனத்தை விட்டு இறங்கி, மற்றய வாகனத்தின் சாரதிக்கு நிலை எப்படியோ என்று அறியும்படி விரைந்து சென்று, “தம்பி, நீ எப்படி இருக்கின்றாய்” என்று சாரதியை விசாரித்தார். சிறு காயங்களுடன் தப்பித்துக்கொண்ட மற்றய இளம் சாரதி, இந்த ஐயாவை கண்டதும், கோபமடைந்து, தகாத வார் த்தைப் பிரயோகங்களை செய்து கொண்டான். குற்றம் தன்மேல் இருக்க, “உனக்கு வாகனத்தை சரியாக ஓட்டத் தெரியாதா?” என்று அந்த ஐயா வை கடிந்து கொண்டான். தனக்கேற்பட்டி ருக்கும் இக்கட்டின் மத்தியிலும், எப்படியாவது குற்றத்தை அந்த ஐயாவின் தலையில் போட்டுவிட வேண் டும் என்பதே அந்த இளம் சாரதியின் முழு நோக்கமாக இருந்தது. அந்த ஐயாவோ “உன் உயிரை காத்துக் கொண்ட ஆண்டவருக்கு நன்றி” என்று கூறி தன் வாகனத்தை நோக்கி சென்றார்.

ஒரு இக்கட்டான சூழ்நிலையை எதிர்நோக்கும்போது, எப்படியாக குற்றத் திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பது பொதுவாக மனிதர்களுடைய மனதில் தோன்றும் எண்ணமாக இருக்கின்றது. அது ஒரு வாகன விபத்தாக இருக்கலாம், வேலை தளத்திலே ஏற்படும் பிரச்சனைகளாக இருக்கலாம், பாடசாலையிலே ஏற்படும் குழப்பங்களாக இருக்கலாம், வெளி இடங்களிலே, கடைத் தெருக்களிலே ஏற்படும் அசௌகரியங்க ளாக இருக்கலாம் ஆலய ஐக்கியங்களிலே ஏற்படும் கருத்து முரண் பாடாக இருக்கலாம் அல்லது வீட்டிலே சொந்த குடும்பத்திலே ஏற்படும் சிறிய தகராறாக இருக்கலாம், அந்நிலையிலே, சூழ்நிலைகளை சற்றும் ஆராய்ந்து பார்க்காமல், தங்களது பக்கத்தை எப்படியாவது நியாயப்ப டுத்த வேண்டும் என்பதற்காக, தன்னிட்சையாகவே, மனிதர்கள் பெரும்

முயற்சிகளை எடுத்துக் கொள்கின்றார்கள். சில வேளைகளிலே தங்க ளுக்கென பொய் சாட்சிகளைக்கூட ஏற்படுத்தி விடுகின்றார்கள். தங்கள் முயற்சிகள் கைகூடாதவிடத்து, தம்மைப் படைத்த தேவனை குற்றப்ப டுத்திக் கொள்கின்றார்கள்.

ஒரு மாளிகை வளாகத்தை பாதுகாப்பதற்காக நியமனம் பெற்ற பாது காப்பு உத்யோகஸ்த்தன், அந்த மாளிகைக்கு சென்று வரும் யாவரையும் பரிசீலனை செய்த பின்பே உள்ளே அனுமதித்து வந்தான். சந்தேகத் திற்கேதுவான விருந்தாளிகளை சந்திக்கும் போது, அவர்களை தடை செய்து, வீட்டின் சொந்தக் காரரிடம் தொலைபேசி வழியாக நிலையை கூறிக் கொள்வான். இப்படியாக, சந்தேகத்திற்கிடமான சில மனிதர்கள், வீட்டு சொந்தகாரரின் மகனின் நண்பர்கள் என்ற ரீதியிலே, அந்த மாளிகைக்கு போக்கும் வரத்துமாக இருப்பதைக் கண்ட அந்த பாதுகாப்பு உத்தியோகஸ்த்தன், அந்த மாளிகையின் சொந்தக்காரருக்கு பல முறை எச்சரிப்பை வழங்கியிருந்தான். வீட்டின் சொந்தக்காரரும் அவன் மனைவி மற்றும் பிள்ளைகளோ: “அந்த விருந்தாளிகள், தங்கள் மகனுக்கு வேண்டியவர்கள்” என்று கூறி, அந்த பாதுகாப்பு உத்தியோக ஸ்த்தனின் எச்சரிப்பை தட்டிக் கழித்துவிட்டார்கள். ஒரு நாள், அந்த மாளிகை முற்றாக கொள்ளையிடப்பட்டது. மாளிகையிலே வேலை செய்கின்ற சிலர் காயப்படுத்தப்பட்டார்கள். இதைக் கண்ட சொந்தக்காரர், அந்த பாதுகாப்பு உத்யோகஸ்த்தனை மிகவும் கண்டித்து பேசினார். அவனை இனி தன் மாளிகைப் பக்கம் வரவேண்டாம் என்று வேலை நீக்கம் செய்துவிட்டார். சில கிழமைகளுக்கு பின்பு, நண்பர்கள் என்று கூறி தன் மகனை சந்திக்க வந்த மனிதர்களே, தன் மாளிகையை திட்டமிட்டு கொள்ளையடித்த வர்கள், என்பதை உறுதி செய்து கொண்ட போது தன் கவலயீனத்தை யும், அதனால் உண்டான பின்விளைவுக ளையும் உணர்ந்து கொண்டார்.

மனிதர்கள், தங்கள் வாழ்க்கையில் சுகமும் சமாதானமும் பெருகி இருக்கும் காலத்திலே, தேவனுடைய எச்சரிப்பை தள்ளிவிடுகின்றார்கள். தேவன் விலக்கி வை என்று கூறும் காரியங்கள் தங்களுக்கு தேவை என்று எடுத்துக் கொள்கின்றார்கள். பின்பு, அதனால் வரும் பாதகங்களை காணும் போது, தேவனுக்கு கண்கள் இல்லையா? ஏன் இப்படி ஆயிற்று என்று கூறிக் கொள்வார்கள். தங்கள் குற்றங்களை ஏற்றுக் கொண்டு மனம்திரும்புவதற்கு பதிலாக தேவனையே குற்றம் சாட்டிவிடுகின்றார்கள்.

இவ்வண்ணமாக தங்கள் தப்பிதங்களை ஏற்றுக் கொள்ளாமல் வாழும் வாழ்க்கை, முந்தின மனுஷனாகிய ஆதாம் வழியாக உண்டான சுபாவ மாக நமக்குள் இருக்கின்றது.

மனித குலத்தின் பாவங்களை நிவர்த்தியாக்கும்படிக்கு, வாக்களிக்கப்பட்ட மீட்பராகிய இயேசு கிறிஸ்து இந்தப் பூமியிலே தாழ்மையின் ரூபத்திலே வெளிப்பட்டார். அவர் எந்த பாவமுமில்லா நீதிமானாக இந்த பூமியிலே வாழ்ந்து வந்தார். காலங்கள் நிறைவேறிய போது, அவர்தாமே தம் மையே தாமே குற்றநிவாரணபலியாக ஒப்புக் கொடுத்தார்.

பிரதான ஆசாரியரும் மூப்பரும் சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடினா ர்கள். ஒருவரும் அகப்படவில்லை. அநேகர் வந்து பொய் சாட்சி சொல்

லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை. அப்பொழுது, பிரதான ஆசாரியன் எழுந்திருந்து, இயேசுவை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய் சாட்சி சொல்லுகிறதைக்குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என் றான். இயேசு ரோம அதிகாரியாகிய தேசாதிபதிக்கு முன்பாக கொண்டு செல்லப்பட்டார். பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவர்மேல் குற்றஞ்சாட்டு கையில், அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது, தேசா திபதியாகிய பிலாத்து இயேசுவை நோக்கி: இவர்கள் உன்மேல் எத்த னையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில் லையா என்றான். அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவி ல்லை, அதனால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்.

அவர் மரண ஆக்கினைக்குள்ளாகப்பட்டு, சிலுவையிலே மரிக்கும் தறுவா யில், அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலு க்கி: தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிற வனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள் நீ தேவனுடைய குமாரனானால் சிலுவை யிலிருந்து இறங்கி வா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிர தான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம்பண்ணி: மற்றவர் களை ரட்சித்தான் தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணி யில்லை. இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையி லிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னை தேவ னுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக் கையாயிருந் தானே. அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட் சிக்கட்டும் என்றார்கள். அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள். (மத்தேயு 27:39-44)

“அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.” (ஏசாயா 53:7)

மீட்பராகிய இயேசு மனிதகுலத்தின் குற்றங்கள் யாவையும் தன்மேல் ஏற்றுக் கொண்டார். தம்மை கொலை செய்கின்றவர்களின், நிந்தையான வார்த்தைகளை கேட்ட போது, அதற்கு மறு உத்தரவு சொல்லாமல் அந்த பழியையும் தம்மேல் ஏற்றுக் கொண்டு அவர்களை மன்னித்து விடும்படி தம் பிதாவை வேண்டிக் கொண்டார்.

அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார் அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம் அவர் அசட்டைப ண்ணப்பட்டிருந்தார் அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட் டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

ஆம்! இந்த பூமியும் அதிலுள்ள படைப்புக்கள் யாவும் தோன்றும் முன்பாக என்றென்றும் இருக்கின்றர் இயேசு தாமே, முந்தின ஆதாம் (First Adam) வழியாக உண்டான நித்திய ஆக்கினையை நீக்கும்படி, தம்மைத் தாழ்த்தி, மனித ரூபமமெடுத்து, இந்த பூமியிலே வெளிப்பட்டார். அதனால் அவர் பிந்தின (Last) ஆதாம் என்று அழைக்கப்பட்டார். பிந்தின ஆதாமாகிய இவர் உயிர்ப்பிக்கிற ஆவியானார். முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன் அவன் வழியாக குற்றம் சாட்டுதல் உண்டானது. இரண்டாம் மனுஷனாகிய ஆதாம் வானத்திலிருந்து வந்த கர்த்தர். இவர் வழியாக குற்றத்திலிருந்து விடுதலையடையும் ஜீவ மார்க்கம் உண்டானது. ஒரே மனுஷனாகிய முந்திய ஆதாம் வழியாக பரலோகம் அடைக்கப்பட்டது. (1 கொரி 15:46-47) அல்லாமலும், ஒருவனு டைய மீறுதலினாலே அந்த ஒருவன் மூலமாய், மரணம் ஆண்டுகொண் டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத் தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே. ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படு வார்கள். (ரோமர் 5:17-19)

பிரியமானவர்களே, "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமா ட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." (நீதிமொழிகள் 28:13). நமக்குப் பாவமில்லையென்போமா னால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரி ப்பதற்கு தேவன் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகி றவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது. (1 யோ வான் 8-10)

எனவே, நாங்கள் எங்கள் ஜென்ம சுபாவமாகிய குற்றம் சாட்டுதல், குற்றங்களை நியாயப்படுத்துதலாகிய முந்தின மனுஷனாகிய பாவ ஆதா மின் சாயலை களைந்து, பாவமில்லாத பிந்தின ஆதாமாகிய எங்கள் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் சாயாலிலே வளரும்படிக்கு, அவரால் உண்டான ஜீவ மார்க்கத்தின் வழியிலே செல்வோமாக.

**இருதயத்தை ஆராய்ந்தறிகின்ற தேவன், உங்களை வழிநடத்திச் செல் வாராக! ஆமேன்!**

# சிறுமைப் பட்டவர்களுக்கு ஆறுதல்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வாசகம் - 2 கொரிந்தியர் 7:6

தேவனுடைய ஆசீர்வாதங்கள் நிலையானவைகள். அது ஒரு நாளிலே அழிந்து கலைந்து போவதில்லை. எங்களுடைய தேவனை பல நாமங் களைச் சொல்லி அழைக்கின்றோம். எடுத்துக் காட்டாக, பரிகாரியாகிய கர்த்தர், நல்ல மேய்ப்பன், வெற்றி தரும் தெய்வம், அவருடைய பர்வ தத்தில் எல்லாம் பார்த்துக் கொள்ளப்படும், சர்வ வல்லமையுள்ள தேவன் என்று அவருடைய குணாதிசயங்களை வெளிப்படுத்தும் பல நாமங்களை சொல்லி நாங்கள் துதிக்கின்றோம்.

இன்றைய நாளிலே அவர் சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் என்பதின் கருப்பொருளை ஆராய்ந்து பார்ப்போம். சிறுமைப்பட்ட வர்கள் யார்? இந்த உலகிலே ஏழைகள் என்று அழைக்கப்படுகின்ற வர்களா? அல்லது மனித முறைமைகளின்படி கற்று தேறாதவர்களா? சிறுமைப்பட்டவர்கள், தங்கள் இருதயத்தில் நெருக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட வர்களாயிருக்கின்றர்கள். இறுதியிலே அவர்கள் வாழ்க்கை மன அழுத்தம் நிறைந்ததாய் காணப்படுகின்றது. தேவ ஊழியராகிய பவுல், இந்த உலக முறைமையின்படி கற்றுத் தேர்ந்தவரும், அந்தஸ்துள்ளவராக இருந்தும், தன் ஊழியப் பாதையிலே வெகுவாய் நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட சூழ்நிலைகளை கடந்து சென்றார். சாமுவேலின் தாயாகிய அன்னாள், தன் கணவனால் அதிகமாக நேசிக்கப்பட்டிருந்தும், தன் வாழ்க்கையிலே உண்டான நெருக்கத்தினால் “தேவரீர் உம்முடைய அடியாளின் சிறு மையைக் கண்ணோக்கிப் பாரும்” என்று தன் இருதயத்தை ஊற்றி ஜெபம் பண்ணினாள்.

மனிதர்கள் வாழ்க்கையிலே நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு போகும் போது அவர்கள் சிறுமைப்படுத்தப்படுகின்றார்கள். அதிலிருந்து மீண்டு கொள்வது அவர்களுடைய பெலத்திற்கு மிஞ்சின காரியம். ஏனெனில் அவர்கள் வாழ்க்கை பல அழுத்தங்களால் அமுக்கப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட வர்க ளுக்கு எங்கள் தேவன் ஆறுதல் செய்கின்றவர். அந்த ஆறுதல்; ஒரு நல்ல செய்தியாகவோ, பெரும் உதவியாகவோ, நல் ஆலோசனை யாகவோ, அரணன பாதுகாப்பாகவோ அல்லது இக்கட்டான சூழ்நிலை யிலே அவசியமானது எதுவோ, அதை அனுக்கிரகம் செய்கின்றவர் தேவ னாக இருக்கின்றார்.

“எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்தி லிருந்து எனக்கு ஒத்தாசை வரும். உன் காலைத் தள்ளாடவொட்டார் உன்னைக் காக்கிறவர் உறங்கார். இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை” என்று சங்கீதப் புத்தகத்திலே

கூறப்பட்டிருக்கிற பிரகாரமாக, ஒரு மனிதன் தன் வாழ்க்கையிலே சிறுமைப்பட்டிருக்கையில், தன் கண்களை தேவனை நோக்கி ஏறெடுக்கும் போது அவர் அவனுக்கு உதவி செய்கின்றவராயிருக்கின்றார்.

அக்காலத்திலே, தேவ நற்செய்தியை அறிவித்ததின் நிமித்தம், தேவ ஊழியராகிய பவுல் வெகுவாய் துன்பப்படுத்தப்பட்டார். அவருடைய வாழ்க்கையிலே பெரிதான நெருக்கம் உண்டாயிருந்தது. அந்த நாட்களிலே அவர் தன்னுடைய ஊழியத்தின் பிரயாசங்களினால் உண்டான பலனைக் கேள்விப்பட்ட போது, பல நெருக்கங்களின் மத்தியிலும் அவர் ஆறுதல் அடைந்தார்.

ஒருவேளை இன்று நீங்கள் பொருளாதார நெருக்கடியில் இருக்கலாம் அல்லது சரீரத்திலே உண்டாயிருக்கும் வியாதியினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கலாம் அல்லது வாழ்க்கையில் உண்டாயிருக்கும் பிரத்தியேகமான சூழ்நிலைகளால் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கலாம், அது எதுவாக இருந்தாலும், பிரச்சனைகள் ஏராளமாக சூழ்ந்திருந்தாலும், அவை யாவற்றின் மத்தியிலும் தேவன் ஆறுதலளிக்கின்றவராயிருக்கின்றார். எங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திலே பதில் உண்டு. எனவே எங்கள் கண்களை கர்த்தர் மேல் பதியவைப்போம்.

நாங்கள் தேவனோடு ஒப்புரவானவர்களாய் இருப்போமென்றால் நாங்கள் தேவனுடையவர்களாய் காணப்படுவோம். நாங்கள் அவருக்கு சொந்தமானவர்களாக இருப்போம். நாங்கள் தேவனுக்கு சொந்தமானவர்களாய் இருப்போமென்றால் அவருடைய குணாதிசயங்கள் எங்களிலே வெளிப்பட வேண்டும். எங்கள் தேவனாகிய கர்த்தர் சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதலளிக்கின்ற தேவனாயிருக்கின்றார். அது போலவே நாங்களும் மற்றவர்களுடைய சிறுமையிலே அவர்களுக்கு ஆறுதலளிக்கின்றவர்களாக மாற வேண்டும்.

மனிதர்கள் பொதுவாக, தேவனே நீர் என்னை ஆசீர்வதிக்க வேண்டும், என்னுடைய மாதாந்த ஊதியத்தை எனக்கு கூட்டி, தரவேண்டும் என்று வேண்டுதல் செய்கின்றார்கள். தேவன் அதை அவர்களுக்கு அனுக்கிரகம் செய்கின்றார். அப்படியாக என் வாழ்க்கையிலே நான் பெற்ற தேவ ஆசீர்வாதங்களை, என்னுடையது, நான் பெற்றுக் கொண்டது, எனவே நான் அதிலே திருப்த்தியாய் வாழ்வேன் என்று எண்ணிக் கொள்ளாமல், தேவன் எங்களை ஆசீர்வதித்ததுபோல நாங்களும் மற்றவர்களுடைய வாழ்க்கையிலே ஆசீர்வாதங்களாக மாற வேண்டும்.

எங்கள் தேவன் அவர் சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிறவராய் இருக்கின்றார். எனவே நாங்களும் அவருடைய குணாதிசயங்களிலே பங்குள்ளவர்களாக சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்வோம்.

**[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும் இணையத் தளத்தில் (INTERNET WEBSITE இல்) தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]**

# பொல்லாங்கனின் தந்திரங்கள்

குடியிருப்புப் பகுதியிலே (Residentil Area) தன் வாகனத்தை அதி வேக மாக ஓட்டிச் சென்ற மனிதனொருவன், தன் வாகனத்திற்கு முன்பாகச் செல்லும் மற்றய வாகனங்களையும் தாண்டிச் செல்லும்படிக்காக அங் குமிங்குமாக தனது வாகனத்தை ஓட்டிக் கொண்டு செல்வதை, தன் மகனோடு பாடசாலை பரிசளிப்பு விழாவிற்கு சென்று கொண்டிருந்த தந்தையொருவர் அவதானித்தார். அவர் தன் வாகனத்தை தெரு ஓரத்திலே நிறு த்திவிட்டு, தாறு மாறாக தன் வாக னத்தை ஓட்டிச் செல்லும் மனிதன், கட ந்து செல்லும்படி இடங் கொடுத்தார். அதை கவனித்த மகன் தன் தந்தையை நோக்கி: அப்பா, சாலை விதியின்படி நீங்கள் தானே முன்பாக செல்ல வேண் டும், பொலிசாரிடம் அகப்பட்டால் அந்த மனிதன் தானே பிரச்சனையில் மாட்டிக் கொள்வான். ஏன் நீங்கள் ஒதுங்கி, அவனுக்கு இடங் கொடுக்க வேண்டும் என்று கேட்டான். அதற்கு தந்தையானவர்: மகனே, அந்த மனிதனுக்கு சாலை விதிகள் ஒரு பொருட்டல்ல. பிரச்சனையை தேடிச் செல்லும் மனிதனைப் போல அவன் அங்கலாய்க்கின்றான். அவன் என் வாகனத்தோடு மோதினால், அவன் மேல்தான் குற்றம் என்பது உண்மை. ஆனால் நீயும் நானும் விபத்தில் சிக்கிக் கொண்ட பின், யார் சரி? யார் பிழை? என்பதில் அதிக பலன் இல்லை. விபத்துண்டானால்: எங்கள் காலமும், சுகமும், பணமும் விரையமாகும் அல்லவோ. நாங்கள் முக்கியமான நிகழ்ச்சிக்கு சென்று கொண்டிருக்கின்றோம் எனவே நாங்கள் சூழ்நிலைகளை நிதானித்து செல்ல வேண்டும் என்று பதிலளி த்தார். ஆம் பிரியமானவர்களே, இந்த உலகம் பொல் லாங்கனுக்குள் கிடக்கின்றது (1 யோவான் 5:19). நாங்களோ, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்யும்படி வேறு பிரிக்கப்பட்டிருக்கின்றோம். சட்டத்தையும், ஒழுங்கையும் குறித்து பொல்லாங்கனுடன் பேசுவதில் என்ன இலாபம்? உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள் போட்டால் தங் கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும். மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயி ருக்கும். கருப்பொருளாவது, வாழ்க்கையில் வரும் இடையூறுகளை இன ங்கண்டு அவைகளை தவிர்த்துக் கொள்ளும்படிக்கு நாங்கள் எப் பொழுதும் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். பொல்லாங்காய் தோன்றுகின்ற காரியங்களை விட்டு விலகி நலமானவைகளை பிடித்துக் கொள்வோம்.

**1 தெச 5:22**

பொல்லாங்காய்த் தோன்கிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, பொல்லாங்கனின் தந்திரங்களை இனங்கண்டு, அவைகளினாலே என் நாட்களை வீணடிக்காதபடிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைத் தந்து நடத்துவீராக இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆவிக்குரிய யுத்தம்

இரண்டு நாடுகளுக்கிடையிலே யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. வயது காரணமாகவோ, உடல் பெலவீனங்கள் காரணமாகவோ யுத்த களத்திற்கு செல்ல முடியாதிருந்த குடிமக்களில் பலர் எப்படியாவது தங்களால் முடிந்த ஆதரவை தங்கள் நாட்டின் ராஜாவிற்கும், தளபதிக்கும், பட்டாளத்திலே சேவை புரிபவர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக இருந்தார்கள். இவர்கள் இராஜபக்தியுள்ள குடிமக்கள். ஆனால், அத்தேசத்திலிருந்த சிலரோ, தேசத்திற்கு ஆதரவாக இருப்பதற்கு பதிலாக, தங்கள் படைகளை குறித்து குறை கூறுவதிலும், எதிர்த்து யுத்தம் செய்யும் அந்நிய நாட்டு அரசனுக்கு, தங்கள் நாட்டின் இரகசியங்களை குறித்து தூது அனுப்பிக் கொண்டுமிருந்தார்கள். இப்படிப்பட்டவர்களை துரோகம் செய்கின்றவர்கள் என்று அழைப்பார்கள். எங்கள் வாழ்க்கையில் நாளாந்தம் ஆவிக்குரிய யுத்தம் உண்டு. அதாவது, நாங்கள் பிதாவாகிய தேவனின் சித்தத்தை எங்கள் வாழ்வில் நிறைவேற்ற வேண்டும். ஆனால் அதற்கு எதிராக பிசாசின் பொல்லாத ஆவிகளின் சேனைகள் எதிர்த்து நிற்கின்றன. எப்படியாவது, தேவ ஊழியர்களை, விசுவாசக் குடும்பங்களாகிய எங்களையும் பிதாவின் சித்தம் செய்யும் சிந்தையிலிருந்து பிரித்து, ஒருவரோடொருவர் யுத்தம் செய்ய வைப்பதே பிசாசானவனின் தந்திர உபாயம். அதற்கு இரையாக நாங்கள் அகப்படுவோமென்றால், தங்கள் தேசத்திற்கு துரோகம் செய்கின்ற குடிமக்களைப் போல நாமும் மாறிவிடுவோம். நாங்களும், மற்றய விசுவாச குடும்பங்களும் ஆவிக்குரிய போராட்டத்தில், பிசாசானவனோடு எதிர்த்து நிற்கின்ற வேளையில், விசுவாசக் குடும்பங்களின் வாழ்வில் பெலவீனங்களும், குறைவுகளும் இருக்கலாம். அவைகளை நாம் சுட்டிக் காட்டி, அவர்களுக்கெதிராக இன்னுமொரு போராட்டத்தை நாங்கள் ஆரம்பித்துவிடக் கூடாது. மாறாக, நாங்கள் அவர்களுக்காக நாள்தோறும் ஊக்கத்தோடு ஜெபிக்க வேண்டும். அவர்கள் தங்கள் பெலவீனங்களை தாங்களே மேற்கொள்ளும்படிக்கு எங்களால் முடிந்த ஆதரவை வழங்க வேண்டும்.

**எபேசியர் 6:18**

**எந்தச் சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, இந்த வாழ்க்கையின் போராட்டத்திலே, எதிரியானவனை மேற்றகொள்ளும்படி உம்மிலும் உம்முடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படும்படி ஞானத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யாவரும் தேறினவர்களாகும்படிக்கு...

தேவனுடைய அழைப்பைப் பெற்ற தேவ மனிதர்களாகிய நாங்கள் தேறின வர்களாகவும், நற்கிரியைகளை செய்யும்படிக்கு தகுதியுள்ளவர்களாக வும் வளர்ந்து பெருகும் படிக்கே, வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அதாவது, வேத வசனங்களின் அடி ப்படை நோக்கமானது, நாங்கள் இயேசு கிறிஸ்துவை போல தேறின வர்களாவும், நற்கிரியைகளையே செய் கின்றவர்களாகவும் மாற வேண்டும் என்பதாகும். அதன் பலனாக நாங்கள் நித்திய ஜீவனை பரலோகத்திலே சுத ந்தரித்துக் கொள்வோம். அதை மைய மாகக் கொண்டே, வேத வசனங்கள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுத லுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ள வைகளாயிருக்கிறது. *(2 தீமோ 3:16-17)*. ஆனால் பிசாசானவன், வேதவாக் கியங்களைக் கொண்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சோதித்தான். ஆனால், இயேசுவோ அந்த சோதனை க்காரனுக்கு சற்றும் இடங் கொடுக்க வில்லை. ஒடுக்கப்பட்டவன் வாழ்வடையும்படிக்கே வார்த்தையானவர் மனுவாகி இந்த உலகத்திற்கு ஒளியைக் கொடுக்கும் ஜீவ னாக வெளிப்பட்டார். எனவே அந்த ஜீவ வார்த்தைகளை தவறான நோக்க த்திற்கு உபயோகித்து, சக விசுவாசிகளை ஒடுக்கக் கூடாது. தேவனு டைய வார்த்தை எங்களுக்கு நித்திய ஜீவனை கொடுக்கின்றது. அந்த வார்த்தை எங்கள் ஆன்மீக போஜனமாக இருக்கின்றது. அந்த வார் த்தை எங்களுக்கு அருமருந்தாக இருக்கின்றது. அந்த வார்த்தை எங் களை விடுதலையாக்குகின்றது. அந்த வார்த்தை விசுவாசிகளை அல்ல பகைஞனாகிய பிசாசானவனை ஜெயிக்கின்ற பட்டயமாக இருக்கின் றது. அந்த வார்த்தை எங்களை கண்டித்து, தண்டித்து (சிட்சித்து) நடத் துகின்றது. அதன் பலனானது அழிவு அல்ல. மாறாக அன்பிலே பரிசுத் தமுள்ளவர்களாக எங்களை மாற்றுகின்ற அதே வார்த்தை, இறுதி நாளி லே எங்களை நியாயந்தீர்க்கும். ஆனால் அந்த நியாயாசனம் எங்களுக் குரியதல்ல. கர்த்தராகிய இயேசுவே நீதியுள்ள நியாயாதிபதியாக அந்த நியாயாசனத்திலே வீற்றிருப்பார். எனவே நாமும் மற்றய விசுவாசிகளும் தேறினவர்களாகும்படிக்கு தேவவார்த்தையை பயன்படுத்துவோம்.

**கொலோசெயர் 1:28**

எந்த மனுஷனையும் கிறி ஸ்து இயேசுவுக்குள் தேறி னவனாக நிறுத்தும் படி க்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷ னுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல் லா ஞானத்தோடும் உப தேசம் பண்ணுகிறோம்.

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள பிதாவே, நாங்கள் யாவரும் கிறிஸ்துவைப் போல தேறினவர்களாகும்படிக்கு நாம் கேள்விப்பட்ட அருள்வாக்கை, பயன்படு த்தி பலனை பெற்றுக் கொள்ளும்படி, தெளிந்த புத்தியைத் தந்தருள் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஊழியர்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்

உங்களை வழிநடத்த நியமிக்கப்பட்டிருக்கின்ற ஊழியர்களை குறித்து உங்கள் எதிர்பார்ப்பு என்ன? சற்று சிந்தித்துப் பாருங்கள். பொதுவாக, மனிதர்கள் தங்கள் ஊழியர் இயேசு கிறிஸ்துவைப் போல எந்த குறையும் இன்றி ஊழியம் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றார்கள். அந்தப்படியே, தம்முடைய ஊழியர்கள் இருக்கும்படிக்காக இயேசு கிறிஸ்துவும் விரும்புகின்றார். ஊழியர்கள் மட்டுமல்ல, நாங்கள் யாவரும் தம்மைப்போல மாற வேண்டும் என்பதையே இயேசு விரும்புகின்றார். இந்த உலகிலே எங்களை வழிநடத்த நியமிக்கப்பட்ட ஊழியர்கள் எங்களோடு சேர்ந்து ஜீவயாத்திரையிலே ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். நாளாந்த வாழ்க்கையிலே எங்களுக்கு ஏற்படும் போராட்டங்களும், உபத்திரவங்களும் அவர்களுக்குமுண்டு. அதைவிட அதிகமாக பிசாசானவன் அவர்களை விழுத்தும்படிக்கு இன்னும் அதிகமாக செயற்பட்டுக் கொண்டிருப்பான். ஏனெனில், ஒரு ஊழியரின் விழுகையினால் பலர் விசுவாசத்தை விட்டு இடறிப்போக தக்கதான சாத்தியம் உண்டு. இப்படியான சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெறும்போது, தேவனுக்கு எதிராக செயற்படும் இவ்வுலக சக்திகள் அச்செய்திகளை வெகுவிரைவாக பரப்பிவிடுகின்றார்கள். ஊழியர்களின் விழுகையை பிசாசானவன் விரும்புகின்றான். அதன்படிக்கே எங்கள் பிரதான மேய்ப்பனாகிய இயேசு கிறிஸ்துவையும் சோதித்தான். இயேசுவின் பிரதான சீஷனாகிய பேதுருவை சுளகிலே புடைக்கின்றது போல புடைத்தான். யூதா ஸ்காரியோத்தை வஞ்சித்தான். எனவே நாங்கள் யாவரும் எங்களை வழிநடத்துகின்ற ஊழியர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும் தினமும் ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். அவ்வப்போது ஏற்படும் குறைகளை கண்டாலும் அவர்களை சபிக்காதிருங்கள். தேவன் அவர்களுக்கு கொடுத்த பொறுப்பை நிறைவேற்றி முடிக்க பிசாசானவனுடைய தூதர்கள் கையினின்று காத்துக் கொள்ளும்படிக்கு, தேவனுடைய அநாதி தீர்மானம் அவர்களில் நிறைவேறும்படிக்கு அனுதின ஜெபங்களிலே ஊழியர்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

**1 தெச 3:1-2**

உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறதுபோல, எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கும், துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும், எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்;

**ஜெபம்**: கிருபை நிறைந்த தேவனே, உம்முடைய ஊழியத்தை முன்னெடுத்துச் செல்லும் ஊழியர்களின் வாழ்க்கையிலே உம்முடைய திருச்சித்தம் நிறைவேறும்படிக்கு அவர்களை ஆசீர்வதிப்பீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# "எனக்கு அவரை பிடிக்கவில்லை"

எங்களுக்கு ஆவிக்குரிய போராட்டம் உண்டு என்று இரண்டாம் திகதி தியானத்திலே பார்த்தோம். என்னுடைய நாளாந்த வாழ்க்கையிலே அந்த போராட்டங்கள் என்ன? இந்த உலகத்திலே எங்களுக்கு உபத்திரவங்களும், சவால்களும் உண்டு. சில வேளைகளிலே அவை எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையாக இருக்கலாம். ஆனால் நாளாந்தம் மனிதர்கள் தங்கள் மனதிலே உண்டாகும் போராட்டங்களை பொருட்படுத்துவதில்லை. அவற்றுள் சிலவற்றை அடுத்த சில நாட்களாக தியானிப்போம். எடுத்துக்காட்டாக, நீங்கள் செல்லும் சபையில் உள்ள ஒரு சக விசுவாசியை ஏதோ ஒரு காரணத்தினால் உங்களுக்கு பிடிக்கவில்லை. அந்த நபர் யாராகவும் இருக்கட்டும். ஆனால் அப்படியான சிந்தை உங்கள் மனதிலே தோன்றும் போது, உங்கள் மனதின் யோசனையை உடனடியாக தேவனுடைய வார்த்தையின்படி சரி செய்து கொள்ள வேண்டும். அந்த சிந்தையை உங்களைவிட்டு அகற்றாதவிடத்து, அது ஒரு சிறிய பிரிவினையின் வித்தாக உங்கள் இருதயத்திலே விதைக்கப்படும். அது வளர்ந்து அதன் கனியை அதன் காலத்தில் கொடுக்கும். மனிதன் எதை விதைக்கின்றானோ அதை அறுப்பான். (கலாத்தியர் 6:8). "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள்" என்று இயேசு கூறியிருக்கின்றார். அதாவது, எங்கள் சத்துருவையே நேசிக்க வேண்டுமானால், எங்கள் உடன் சகோதரரை எவ்வளவு அதிகமாக நேசிக்க வேண்டும். சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு வேளை அந்த நபர் எங்களுக்கு தீமை செய்திருந்தாலும், கசப்பான பிரிவினையின் வேர் எங்கள் உள்ளத்தில் முளைத்தெழும்பாதபடிக்கு எங்கள் இருதயத்தை வேத வார்த்தையின்படி காத்துக் கொள்ள வேண்டும். எனவே, எந்தவிதமான பகையையும், வன்மத்தையும் உண்டுபண்ணும் சிந்தனைகளை எங்களை விட்டு முழுமையாக அகற்றி விடவேண்டும். சபை ஐக்கியத்திற்கு வரும் ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் ஆவிக்குரிய வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்தில் இருக்கின்றார்கள். சிலர், புதிதாய் பிறந்த குழந்தையைப் போலவும், சிலர் பிள்ளைகளைப்போலும் இருக்கலாம். எனவே, திடனற்றுப் போகாதபடிக்கு அன்போடு அறிவுரையை வழங்குங்கள். அவர் கள் மேல் பொறுமையுள்ளவர்களாயிருங்கள்.

**லூக்கா 6:32**

**உங்களைச் சிநேகிக்கிறவர்களையேநீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே.**

**ஜெபம்**: எல்லோரையும் அன்பு செய்யும் தேவனே, என் மனதிலே எந்த மனிதனைக் குறித்த கசப்பையும் வளரவிடாதபடிக்கு, என் இருதயத்தை நீர் தங்கும் ஆலயமாக வைத்துக் கொள்ள கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உன் சகோதரன் நெருக்கப்படும் போது...

குளிர் நாட்களிலே ஏற்பட்ட சளிச்சுரத்தினால் (influenza) ஒரு மனிதன், இரண்டுகிழமைகளாக நோய்வாய்ப்பட்டிருந்ததுமல்லாமல், மூட்டு நோவினால் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். அதை கண்ட அவனுடைய மூத்த சகோதரன்: இவன் குளிர்நாட்களிலே ஏற்படுகின்ற சளிச்சுரத்தை தாங்க முடியாதவனாக இருக்கின்றானோ அல்லது பாசாங்கு செய்கின்றானோ?" என்று கூறிக் கொண்டான். அதற்கு பதில் கூறுவதற்கு கூட பெலனில்லாதவனாக அந்த இளைய சகோதரன் மௌனமாக இருந்துவிட்டான். சில கிழமைகளுக்கு பின்பு, அந்த மனிதனுக்கு ஏற்பட்டிருந்த சளிச்சுரம், அவனுடைய மூத்த சகோதரனையும் பற்றிக் கொண்டது. அந்த நேரத்திலே தன் சகோதரன் அனுபவித்த வியாதியின் வேதனையை தானும் உணர்ந்து கொண்டான். "காய்ச்சலும் தலையிடியும் தனக்கு வந்தால் தான் தெரியும்" என்ற பழமொழியை நாங்கள் கேட்டிருக்கின்றோம். ஒரு சகோதரன் குறிப்பிட்ட பிரச்சனையில் அகப்பட்டிருக்கும் போது, பலரும் பலவிதாக பேசிக் கொள்வார்கள். அந்த சகோதரனின் பிரச்சனை: அவனைக் குறித்ததாகவோ, அவன் மனைவி பிள்ளைகளைக் குறித்ததாகவோ அல்லது அவனுடைய வேலையைக் குறித்ததாகவோ இருக்கலாம். ஒருவேளை, அந்த சகோதரன் தான் செய்த குற்றத்தினாலே பெரும் பாதகத்தில் சிக்கியிருக்கலாம். அப்படியாக உங்களில் ஒருவர் பிரச்சனையில் சிக்கித் தவிக்கும் போது, அந்த சகோதரனையோ அல்லது சகோதரியையோ குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன என்பதை சிந்தித்துப் பாருங்கள். அறிந்தோ அறியாமலோ நீங்கள் ஒரு குற்றத்தில் அகப்பட்டு, அதிலிருந்து விடுதலையடைய முடியாமல் இருக்கும் போது, "நான் குற்றம் செய்தேன் அதன் விளைவாக பெரும் பாதகத்தில் அகப்பட்டிருக்கின்றேன். எனக்கு இரங்கி யாரேனும் உதவி செய்ய மாட்டார்களா" என்ற ஏக்கம் அவன் மனதில் இருக்குமல்லவா! எனவே உடன் சகோதரனின் வாழ்வில், அவனது குடும்பத்தில் பிரச்சனையாக இருக்கலாம் அல்லது பொருளாதார நெருக்கடியாக இருக்கலாம் அல்லது வேறு ஏதேனும் பிரச்சனை இருக்கலாம். அப்படியான சூழ்நிலையிலே நீங்கள் அகப்பட்டிருக்கும் போது, மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் உங்கள் உடன் சகோதரனுக்குச் செய்யுங்கள்.

**லூக்கா 6:31**

மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, என்னை சூழ உள்ளவர்களின் வாழ்வில் ஏற்படும் குறைகளை நிறைவாக்கும்படிக்கு அவர்களுக்கு இரங்கும்ப டிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எங்கள் வாழ்வின் முதிர்ச்சி

ஒரு வாலிபன், கணிதத் துறையிலே பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து, முதுகலைப் பட்டத்திற்கான (Master's Degree) படிப்பை தொடர்ந்து கொண்டிருந்தான். அதே வேளையிலே அந்த அயலிலே வசிக்கும் சிறு பையன், பாலர் வகுப்பிலே, இலக்கங்களையும், அடிப்படை கூட்டல் கணக்கையும் படித்துக் கொண்டிருந்தான். முதுகலைப் பட்டப்படிப்பை தொடரும் வாலிபனுக்கு அந்த சிறு பையன் படிக்கும் ஆரம்ப கணிதம் மழலை மொழியாக இருந்த போதிலும், அந்த சிறு பையனுக்கு அது கடினமாகவே இருந்தது. இதற்கொத்ததாகவே, நாங்கள் ஒவ்வொருவரும் வாழ்வின் வளர்ச்சியின் பல கட்டங்களிலே இருக்கின்றோம். "என் வாழ்க்கையிலே முப்பது வருடங்களாக பல இன்னல்கள் சோதனைகளை கடந்து வந்தேன், ஆனால் அந்த சகோதரன், வாழ்வில் ஏற்பட்டிருக்கும் அற்பமான காரியத்திலே சோர்ந்து போய் விட்டான்" என்று மனிதர்கள் கூறுவதை நாங்கள் கேட்டிருக்கின்றோம். அப்படியாக எங்கள் வாழ்க்கையிலே நாங்கள் அநேக வருடங்களை நாங்கள் கடந்து வந்திருந்தாலும், தங்கள் வாழ்க்கையை ஆரம்பிக்கும் இளம் சகோதரர்களின் நிலையைக் குறித்து புரிந்துணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஒரு மனிதன் தன் ஆவிக்குரிய போராட்டத்திலே உண்மையாகவே முதிர்ச்சி நிலையை அடைந்திருந்தால், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக வளர்ந்து வரும் மற்றய சகோதர சகோதரிகளைக் குறித்த கரிசனை அதிகமாக இருக்கும். அதாவது, நாங்கள் கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாக இருந்தால், மற்றவர்களைக் குறித்த குறைகளிலும் குற்றங்களிலும் தரித்து நிற்காமல், அவர்களும் எங்களைப் போல நாளுக்கு நாள் நிறைவான வளர்ச்சியில் தேறினவர்களாக நிற்கும்படிக்கு, எங்கள் ஆவியின் கனியாகிய நீடியபொறுமையை வெளிக்காட்ட வேண்டும். "என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்." என்று தேவ மனுஷனாகிய பவுல் கூறியதைப் போல, சாந்தமுள்ள ஆவியுடன் கிறிஸ்துவின் அழைப்பு அவர்களில் நிறைவேறும்படிக்கு அதிகமாக பிரயாசப்படும் போது, எங்களின் முதிர்ச்சி மற்றவர்களுக்கு வெளிப்படும்.

**கொலோசெயர் 1:28**

எந்த மனுஷனையும் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்.

**ஜெபம்**: நீடிய பொறுமையுள்ள தேவனே, நீர் என்மேல் காண்பிக்கும் இரக்கத்தையும் பொறுமையையும் நானும் மற்றவர்களிடம் காண்பிக்கத்தக்கதாக, உமக்கு ஏற்ற இருதயத்தை என்னில் உருவாக்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | வைகாசி 8 — 📖 மாலை வாசகம் – யாக்கோபு 4:14 –16

# நாளைய தினத்தை குறித்த திட்டம்

நாளைய நிலையை அறிந்தவன் யார்? சிலர் தங்களது மிகையான ஐசுவரியத்தினால், நாளையத்தினத்தைக் குறித்துப் பெருமைபாராட்டுகின்றார்கள். இன்னுமொரு சாரார், வாழ்க்கையின் பழுவினால் நாளைய தினத்தைக் குறித்த நம்பிக்கையற்றவர்களாக கவலையடைகின்றார்கள். இவ்வாறாக இந்த உலக ஐசுவரியத்தின் அளவுகோலானது, மிகையாய் பெற்றவனையும், குறைவாய் பெற்றவனையும் நிலை தவறச் செய்கின்றது. (நீதிமொழிகள் 27:1, மத்தேயு 6:27). ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம் என்றும் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்றும் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள் என்றும் கர்த்தர் கூறியிருக்கின்றார். ஐசுவரியமுள்ள ஒரு மனிதன் “ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல் லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்.” (லூக் 12:16-20). நாளைக்காக கவலையடையும் மனிதர்களை நோக்கி: அற்ப விசுவாசிகளே! என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும் என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படுகின்ற மனிதர்களை நோக்கிடாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? என்று கர்த்தர் கூறியிருக்கின்றார். கருப்பொருளாவது, இந்த உலகத்தின் ஐசுவரியமானது எங்கள் வாழ்க்கையை நிர்ணயிக்கின்றது என்ற எண்ணத்தை முற்றுமாய் எங்களைவிட்டு நாம் அகற்றிவிட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக உன்னதமான தேவன் ஆளுகை செய்கின்றார் என்ற உணர்வை எங்களுக்கு தந்தவரைக் குறித்து மேன்மை பாராட்டுவோம். அவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளவார்

**எரேமியா 9:24**

மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும்செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக் கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்

**ஜெபம்**: நன்மைகளின் ஊற்றாகிய தேவனே, கிருபையையும், நியாயத்தையும், நீதியை செய்கின்ற கர்த்தர் நீர் என்றறிந்து உம்மையே நம்பி வாழும் பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்து வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்க்கையில் புதிய காரியம் தோன்றும்

**ஏசாயா 43:18**

**முந்தினவைகளை நினைக்கவேண்டாம் பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம்.**

“இந்த வேலை இல்லையென்றால் இன்னுமொரு வேலை, இந்த கடை இல்லையென்றால் இன்னுமொரு கடை, இந்த பேருந்தில் ஏறமுடியவில்லையென்றால் மற்றய பேருந்தில் ஏறிக் கொள்வேன்” என்று ஒரு மனிதன் தன் வாழ்க்கையின் கொள்கைகளைக் கூறிக் கொண்டான். இதற்கொத்ததாகவே “கடலிலே எத்தனையோ மீன்கள் இருக்கின்றது” என்று பொருட்படும்படி பழமொழிகளை கூறிக்கொள்வார்கள். இப்படியாக கொள்கைகளிலே தவறு ஏதும் தெரியவில்லை என்று பலர் சொல்லிக் கொள்வார்கள். சிந்தப்பட்டு விரயமாக்கப்பட்ட பாலைக் குறித்து கவலையடையாதே (Don’t cry over spilt milk) அதாவது, கடந்ததையே நினைத்து கலங்கிக் கொண்டிராதே, உன் வாழ்வில் அடைக்கப்பட்ட ஒரு வாசலை நினைத்து உன் வாழ்க்கை முடிந்தது என்று எண்ணிவிடாதே என்பதெல்லாம் மனிதனுக்கு ஊக்கமளிக்கும் வசனங்கள். ஆனால், மேற்கூறிய சம்பவத்திலுள்ள மனிதனோ, தன் கொள்கைக்கு சரிவந்தால் மட்டும் நான் அதை ஏற்றுக் கொள்ளுவேன் அல்லது சரிவராது போனால் இன்னுமொன்றை எடுத்துக் கொள்வேன் என்று தன் அகங்காரத்தில் அதை கூறிக் கொண்டான். எல்லா மனிதர்களுடைய வாழ்விலும் ஏதோ ஒரு கட்டத்தில் சவால்களும் பின்னடைவுகளும் ஏற்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, வேலைத் தளத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டினால் நான் வேலையை இழந்து போய்விட்டேன். அதை நினைத்தே துக்கப்பட்டுக் கொண்டிருப்பதில் எனக்கோ மற்றவர்களுக்கோ பெரும் பலனில்லை. நான் வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டும். இன்னுமொரு வேலையை பெற்றுக் கொள்ள பிரயாசப்பட வேண்டும். ஆனாலும், விட்டுவந்த வேலையில், நடந்த சம்பவத்தில், நான் கற்றுக் கொண்ட பாடம் என்ன? அந்த பாடமானது என்னில் நல்ல மாற்றங்களை உண்டாக்க வேண்டும். மாறாக “நான் செய்து காட்டுவேன்” என்ற மனநிலையையுடையவனாக மாறிவிடக்கூடாது. எல்லா சூழ்நிலைகளிலும் என்னுடைய மனம் மறுரூபமாக வேண்டும். கர்த்தராகிய இயேசுவின் சாயலுக்கு ஒத்த வளர்ச்சி நாளுக்கு நாள் என்னில் பெருக வேண்டும். வனாந்தரத்திலே வழியையும் அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குகின்ற தேவன், எனக்குள்ளும் புதிய காரியங்களைச் செய்வார் என்ற நம்பிக்கையுடன், அவர் சமுகத்திலே எங்களைத் தாழ்த்தக்கடவோம்.

**ஜெபம்**: என் பரிசுத்தரும், சிருஷ்டிகரும் என் ராஜாவுமாகிய கர்த்தாவே, வாழ்க்கையில் ஏற்பட்ட கடந்த கால கசப்பான அனுபவத்தினால் என் இருதயம் கடினப்பட்டுப் போகாதபடிக்கு காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தரை நம்பி நன்மை செய்

ஒரு தொழிற்சாலையிலே வேலை பார்த்து வந்த தொழிலாளி செய்யும் வேலையும், வேலை முறைமைகளும் அந்த தொழிற் சாலையின் அதிபருக்கு விரும்பப்படத்தக்கதாகவே இருந்தது. வேலைத்தளத்திலோ அல்லது அவன் வாழ்க்கையிலோ சவால் நிறைந்த நாட்களை கடக்க வேண்டியிருந்தாலும், தொழிற்சாலை அதிபரிடம் இருக்கும், அந்த தொழிலாளியைக் குறித்த நன்மதிப்பு எப்போதும் அவனுக்கு ஆதரவாகவே இருந்து வந்தது. ஏனெனில் அவன் தன் நற்கிரியைகளால், அதிகாரிகள் மத்தியிலே நன்மதிப்பை பெற்றுக் கொண்டான். இந்த சம்பவத்தோடு ஒப்பனையாக எங்கள் வாழ்க்கையின் கருப்பொருளை சற்று சிந்தித்துப் பார்ப்போம். பூமியும் அதின் நிறைவும் அதன் குடிகளும் கர்த்தருடையது. அவர் சர்வ வல்லமையுள்ள தேவன். அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். அவர் திறக்கக்கூடாதபடி அடைக்கின்றவரும், அடைக்கக்கூடாதபடி திறக்கின்றவருமாயிருக்கின்றார். இப்படிப்பட்ட தேவனாகிய கர்த்தரை நாங்கள் பிதாவாக கொண்டிருக்கிறோம். அப்படியானால், அவருக்கு பிரியமானதை மனதார செய்கின்றவனை எப்படி குறைத்து நாம் பேசமுடியும்? நாங்கள் சர்வ வல்லமையுள்ளவருக்கு பிரியமான பிள்ளைகளாக இருந்தால் எப்படி தாழ்ச்சியடைந்து போக முடியும்? கர்த்தரை நம்பினோர் ஒருபோதும் கைவிடப்படுவதில்லை. நாங்கள் காண்கின்ற வானம், பூமி அதிலுள்ளவைகளெல்லாம் அழிந்து போகும், ஆனால் கர்த்தரை நம்பியிருக்கின்றவன் நித்தியம் நித்தியமாக நிலைத்திருப்பான். “நான், என்னுடையது, எனக்கு” என்று வாழ்பவன் சுயநலம் உடையவன். எதிர்காலத்தைக் குறித்த கவலை அவனை ஆட்கொள்வதால், அவன் தனக்கென்றே சேர்த்து வைக்கின்றான். அப்படிப்பட்ட மனநிலையோடு வாழாமல், கர்த்தரை நம்பி நன்மை செய்யுங்கள். நாளைக்கு என்னுடைய நிலை என்ன ஆவது, என்னுடைய பிள்ளைகளுடைய எதிர்காலம் எப்படியாய் முடியும் என்று கவலையடையாதிருங்கள். நாங்கள் பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். எங்கள் தேவைகள் என்னவென்று அவர் அறிந்திருக்கின்றார். அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ்பவனை அவர் நித்தமும் நடத்தி, மகா வறட்சியான காலங்களிலும் அவன் ஆத்துமாவைத் திருப்த்தியாக்குவார்.

**எபிரெயர் 13:16**

அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள் இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.

**ஜெபம்**: பராக்கிரமமுள்ள தேவனே, என்னிடத்திலுள்ளவைகள் என்னை போஷிக்கும் என்ற எண்ணத்துடன் வாழாமல், உம்மை நம்பி, ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்யும் உணர்வை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| திங்கள் \| வைகாசி 11 | 📖 மாலை வாசகம் – பிலிப்பியர் 3:12 |
|---|---|

# கிரியையுள்ள விசுவாசம்

யுத்த நாட்களிலே, ஒரு தேசத்திலே ஆங்காங்கே அம்பாவிதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, ஒரு கிராமத்திலே எளிமையான வாழ்க்கை நடத்தி வந்த குடும்பத்தினர் யாவரும் புற தேசத்திற்கு செல்லும்படிக்கான நுழைவுச் சீட்டை பெற்றுக் கொள்ளும்படிக்கு, பட்டணத்திலுள்ள கடவுச் சீட்டு வழங்கும் காரியாலயத்திற்கு செல்ல வேண்டியதாக இருந்தது. போக்குவரத்து ஸ்தம்பிதமானதினால், பட்டணத்திற்கு செல்வதற்கு சில நாட்கள் பயணம் செய்ய வேண்டியதாயிருந்தது. பட்டணத்திற்கு செல்வதற்கோ, அல்லது காரியாலத்திற்கு சென்று அலுவல்களை முடிப்படிதைக் குறித்தோ, முன்பின் அனுபவமோ வசதியோ எதுவும் அக்குடு ம்பத்தினருக்கு இருக்கவில்லை. பல வருடங்களாக அயலில் வசித்து வந்த அயல்வாசி, தான் பட்டணத்திற்கு போக வேண்டியிருப்பதாகவும், அக்குடும்பத்தினரை தன்னோடு இணைந்து கொள்ளும்படியும் கூறினார். அந்த மனிதனுடைய பேச்சைக் குறித்த விசுவாசம் அக் குடும்பத்தினருக்கு இருந்தது. ஆனால் காரியம் வாய்க்க வேண்டுமானால் அவர்கள் அந்த மனிதனுடைய பேச்சுக்கு இணங்கி, அவரோடு செல்வதற்கு சம்மதிக்க வேண்டும். அப்படியாக அவர்கள் சம்மதித்து அந்த மனிதனோடு செல்லும் போது, அவர்கள் தங்கள் விசுவாசத்தை கிரியையிலே காண்பிக்கின்றார்கள். போகும் பயணம் இலகுவாக இருக்கப் போவதில்லை. பயங்கரங்களும் அசௌகரியங்களும் ஆங்காங்கே ஏற்படலாம். ஆனால் காரியம் வாய்க்க வேண்டும் என்றால், பின்னிட்டுத் திரும்பாமல், மிகுந்த கவனத்தோடு பயணத்தை தொடர வேண்டும். பிரியமானவர்களே, விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். (எபிரெயர் 11:6) கிரியையிலே காண்பிக்கப்படாத விசுவாசம் தன்னில் தானே செத்ததாயிருக்கும். (யாக்கோபு 4:17) இந்த நாட்களிலே விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைக் குறித்து அதிகமாக தியானிப்போம். கர்த்தர் மறுபடியும் வரும் போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்று கூறியிருக்கின்றார். மறுபடியும் வருவேன் என்று சொன்ன இயேசுவின் வார்த்தையை விசுவாசித்து, அவருடைய நாளுக்கு ஆயத்தமாகும்படி, பரம தேசத்தின் யாத்திரிகர்களாக கொஞ்சக் காலம் இந்த பூமியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்கள், மிகவும் விழிப்புடையவர்களாய், விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருந்து, எங்கள் விசுவாசத்தை எங்கள் கிரியைகளினாலே உறுதிப்படுத்த வேண்டும்.

**எபிரெயர் 11:6**

விசுவாசமில்லாமல்தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, நாட்கள் பொல்லாதவைகளாக மாறிக் கொண்டிக்கும் உலகிலே விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிப் போகாமல் உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்

செவ்வாய் | வைகாசி 12 | 📖 மாலை வாசகம் – யோபு 19:25 – 27

# இன்ப துன்ப வேளைகளில்...

மனிதர்களுடைய வாழ்க்கையிலே ஏற்படும் இன்னல்களானது அவர்களுடைய உண்மையான சுயரூபத்தை வெளிக்காட்டும் என்ற முதுமொழி உண்டு. அதாவது, தாழ்வின் பாதையிலே வாழ்க்கைப் படகு செல்லும் வேளையிலே உறவுகளின் பிணைப்பு பரீட்சை பார்க்கப்படும். சில சந்தர்ப்பங்களிலே, பெற்றோர் பிள்ளைகள், கணவன் மனைவி, சகோதர சகோதரிகள், நண்பர்களுக்கிடையிலான உறவுகள் உடைந்து போய்விடுகின்றது. விசுவாசத் துரோகம் தலைதூக்கிவிடுகின்றது. முன்னொரு காலத்திலே, ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் இருந்தான். அவனுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள். திரளான ஐசுவரியம் அவனுக்கிருந்தது. அதினால் அவன் கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான். அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். அவனுடைய வாழ்விலே விசுவாசத்தின் சோதனை ஏற்பட்டது. அவனுக்கிருந்த சொத்துக்கள், செல்வம் எல்லாம் அழிந்து போயிற்று. அனுடைய பிள்ளைகள் யாவரும் இறந்து போனார்கள். வேலையாட்கள் கொலையுண்டு போனார்கள். யோபின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் சாத்தானானவன் அவனை வாதித்தான். இந்த வேளையிலே அவன் மனைவியோ, தன் வாயினாலே தேவனுக்கு விரோதமான காரியங்களை பேசி, தேவனக்கு எதிரான விசுவாசத் துரோகம் செய்தாள். யோபுவை தேற்ற வந்த நண்பர்களும் அவனை குற்றம் சாட்டினார்கள். ஆனால் யோபுவோ, மிகுந்த இன்னல் வேளையிலும் தன் வாயின் வார்த்தைகளை தேவனுக்கு விரோதமாக எழுப்பாமல், என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். தன் துன்ப வேளையிலும் நண்பர்களுக்காக தேவனை வேண்டிக் கொண்டான். இப்படியாக அவன் தன் விசுவாசத்தை கிரியையிலே காண்பித்தான். பெரிதான மீட்பைப் பெற்றான். யோபுவைப் போல, உயர்விலும், தாழ்விலும், துன்பவேளைகளில் நாங்களும் எங்கள் விசுவாசத்தை கிரியைகளினாலே காண்பித்து, அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை களிப்பான நீரூற்றாக்கிக் கொள்ள வேண்டும்.

**சங்கீதம் 84:6**

**அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளுகிறார்கள்.**

**ஜெபம்:** கிருபை நிறைந்த தேவனே, என் துன்ப வேளைகளிலும் நான் உமக்கெதிராக வார்த்தைகளை பேசாதபடிக்கு விசுவாசத்தின் வார்த்தைகளை அறிக்கை செய்ய என்னை பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | வைகாசி 13 | 🕮 மாலை வாசகம் – பிலிப்பியர் 3:7–11

# பூமியிலே வாழும் ஆயுசு நாட்கள்

விசுவாசத்தின் தந்தை என அழைக்கப்படும் ஆபிரகாம் என்னும் மனிதன், நல்ல நரைவயதிலும், முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான். ஆபிரகாம் உயிரோடிருந்த ஆயுசுநாட்கள் நூற்று எழுபத்தைந்து வருஷம். பொதுவாக எந்த மனிதனும், இந்த பூமியிலே பூரண ஆயுசை அடைய வேண்டும் என்றே விரும்புவார்கள். அத்தகைய வாழ்வை வாழ்ந்து கடந்து சென்றவர்களை ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று கூறிக் கொள்வார்கள். ஆனால், விசுவாசத்தின் போராட்டம்என்பது, வாழ்வின் கால எல்லையை குறித்த விடயம் மட்டுமல்ல. ஆதி அப்போஸ்தலரின் நாட்களிலே, ஸ்தேவான் என்னும் பெயர் கொண்ட உதவி ஊழியக்காரன், விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். இளமையான வயதிலே யூதர்களின் ஆலோசனைச் சங்கத்திலே யூத மதத் தலைவர்களுக்கு முன்பாக நின்று கர்த்தராகிய இயேசுவை குறித்து திடநம்பிக்கையோடு பேசினான். யூத மதத் தலைவர்களோ, அவனை கல்லெறிந்து கொன்றார்கள். ஸ்தேவான் இரத்த சாட்சியாக மரிக்கும் தறுவாயிலும் “முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்.” அவன் தன்னுடைய இளவயதிலும் தன் வாழ்வை ஒரு பொருட்டாக எண்ணாமல், மரணம் வரைக்கும் தன் விசுவாசத்தை கிரியையிலே காண்பித்தான். இப்படியாக அநேகர்: விசுவாசத்தினாலே ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், ஸ்திரீகள் சாகக் கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள் வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள். கருப்பொருளாவது, விசுவாசத்தின் நல்ல போராட்டம் என்பது இந்த பூமியிலுள்ள ஆயுசின் நாட்களை குறித்ததல்ல. விசுவாசத்தின் நல்ல போராட்டமானது, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை அவரவர் தங்கள் அழைப்பின்படி தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்டதை நிறைவேற்றி முடிப்பதாகும்.

**எபிரெயர் 11:35**

வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலை பெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்

**ஜெபம்**: என்னை அழைத்த தேவனே, நான் எந்த காலத்திலும், எந்த வேளையிலும் உம்முடைய அழைப்பின் நோக்கத்தை நிறைவேற்றி முடிக்கும் எண்ணமுடையவனா(ளா)க வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உத்தம மார்க்கத்தாரின் வாழ்வு

தன் இளம் வயதிலே, தன் வாழ்வில் ஏற்பட்ட பின்னடைவுகளினால் ஒரு இளைஞன்: "தேவன் என்றொருவர் இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா" என்று தன் மனதிலே சிந்தித்துக் கொள்வான். அந்த இளை ஞன் மட்டுமல்ல இன்று பல சன்மார்க்கரும், துன்மார்க்கர்களும், ஏன், தேவ அழைப்பைப் பெற்ற சில பிள்ளைகளும், தங்கள் அறியாமையி னாலே இப்படியாக கூறிக் கொள்வதைக் கேட்டிருக்கின்றோம். பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமைக் கைப்பற்றியபோது, ராஜாவின் அரண்மனையில் சேவிக்கத் திறமையுள்ள சில வாலிபரை கொண்டு வரும்படி கட்டளையிட்டான். அவர்களுக்குள் அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களும் அடங்குவார்கள். இந்த வாலிபர்கள், இளம் பிராயத்திலேயே தங்கள் குடும்பத்தையும், தங்கள் தேசத்தையும் விட்டு பிரிக்கப்பட்டு அந்நிய தேசத்திற்கு சிறைப்பட்டு போனார்கள். தங்களுக்கு இருந்த சுதந்திரத்தை இழந்து தாங்கள் அறியாத தேசத்திலே ராஜாவை சேவிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இவர்கள் ராஜாவின் தயவை பெற்றிருந்த நாட்களிலே, ராஜா ஒரு பெரிய சிலையை செய்து, அதை தாழவிழுந்து வணங்கும்படி கட்டளை கொடுத்தான். ஆனால் இந்த வாலிபர்கள் மூவரும், தங்கள் வாழ்வின் பின்னடைவினால் சோர்ந்து போகவில்லை. ஜீவனுள்ள தேவனிடத்திலே விசுவாசமாயிருந்தார்கள். தற்போது இருக்கும் ராஜ தயவையும் பொருட்படுத்தாது, நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள். இந்த இளைஞர்களது விசுவாசத்தின் கிரியையை சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இன்று மனிதர்கள், தங்கள் விருப்பப்படி காரியங்கள் கைகூடாதவிடத்து தேவனை தூஷிக்கின்றார்கள். ஆனால் இந்த இளைஞர்கள் என்னதான் தங்கள் வாழ்க்கையில் நடந்தாலும், நடக்காமல் விட்டாலும். யோபு என்ற பக்தனைப் போல தாங்கள் விசுவாசிக்கும் தேவன்மேல் பற்றுதலாயிருந்தார்கள். பிரியமானவர்களே, நாங்களும் அப்படிப்பட்ட விசுவாசித்திலே நாளுக்கு நாள் வளர வேண்டும்.

**யோபு 13:15**

அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்.

**ஜெபம்:** உண்மையுள்ள தேவனே, என் வாழ்வில் நெருக்கங்கள் சூழ்ந்து கொள்ளும் போது, விசுவாசத்தைவிட்டு தளர்ந்து போகாமல், உம்மை அதிகதிகமாக பற்றிக் கொள்ளும் இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# "விசுவாச அறிக்கை"

சுமார் 2000 வருடங்களுக்கு முன்னதாக இந்த உலகத்திலே, தன்னுடைய மதத்தைக் குறித்து மிகவும் வைராக்கியமுடைய மனிதனொருவன் வாழ்ந்து வந்தார். இவர், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாகிய இஸ்ரவேல் வம்சத்தார். அந்த வம்சத்தில் பென்யமீன் என்னும் கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவர், அந்நாட்களிலே கொடுக்கப்பட்டிருந்தசட்டதிட்டங்களின் படி குற்றம் சாட்டப்படாதவர். ஜனங்களால் அறியப்பட்டிருந்த பரிசேயர் என்ற ஒரு விசேஷித்த குழுவைச் சேர்ந்தவர். குமாலியேலின் என்னும் பிரபல்யமான மனிதனிடத்திலே திட்டமாக கற்றுக் கொண்டவர். அந்நாட்களிலே உலகத்தின் பெரும்பகுதியை ஆண்ட ரோம ராஜ்யத்தின், பெற்றுக் கொள்வதற்கு அரிதான, பிரஜா உரிமையை உடையவர். இந்நாட்களுக்குரிய வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிட்டு பார்த்தால்: ஜாதி, மத, கல்வி, அந்தஸ்து என்பவைகளில் பிறப்பாலோ அல்லது வளர்ப்பாலோ குறைவற்றவர். ஆனால், தேவ அழைப்பை பெற்ற போது, மேற்கூறிய தன்னுடைய தகுதிகள் வரும் இலாபம் அற்பமானது என்றும் அவைகள் மாம்சத்திற்குரியவைகள் என்றும் நன்கு உணர்ந்து கொண்டார். அதாவது, மாம்சத்திற்குரியவைகளினால் எங்கள் எண்ணத்திலிருக்கும் உலக ஆசையை மட்டுமே நிறைவேற்ற முடியும். அவைகள் யாவும் இந்த பூமியோடு ஒழிந்து போகும் என்றும் அவைகளினாலே பிதாவாகிய தேவனையும், அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிய முடியாது என்றும் திட்டமாக அறிந்து கொண்டார். எனவே, கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டார். முன்பு மாம்சத்தில் வாழ்ந்த நாட்களிலே கிறிஸ்துவை சார்ந்தவர்களை வெகுவாய் துன்பப்படுத்தி வந்தார். ஆனால் இப்போது அவர் கிறிஸ்துவை சார்ந்து வாழ்வதினால், பல பாடுகளையும், துன்பங்களையும், வறுமையையும், நிந்தைகளையும் சந்தித்தார். அவை யாவற்றிலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் என்று "**விசுவாச அறிக்கையிட்டார்**". இந்த உலகத்தின் மேன்மையை இழந்து பரலோக நித்திய மேன்மையை அடைந்து கொண்டார். (2 தீமோ 4:6-8).

**பிலிப்பியர் 3:14**

**கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித்தொடருகிறேன்.**

**ஜெபம்**: இந்த உலகத்தின் மேன்மையை அடைய வேண்டும் என்று பிரயாசப்படாமல், அழியாத நித்திய மேன்மையை சுதந்தரித்துக் கொள்ளும்படி விசுவாசத்தை காத்துக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# ஏழையின் கூப்பிடுதல்...

தங்க வீடின்றி அல்லது ஏதோ காரணத்தினால் வீட்டில் இருந்து துரத்தி விடப்பட்டவர்கள், தெரு ஓரமாக தங்குவதுண்டு. மேலும் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்கும் மனிதர்களையும் பல இடங்களிலே காண் கின்றோம். சிலர் இவர்கள் யாவரையும் ஒரே பிரிவுக்குள் வகைப்படு த்திக் கொள்வார்கள். வேறு சிலர், இவர்களின் நிலையைக் குறித்து பலவிதமாக பேசிக் கொள்கின்றார்கள். இன்றை நாட்களிலே ஆங்காங்கே அவ ர்களை கேலி செய்து துன்புறுத்துபவர் களும் இருக்கின்றார்கள். இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே, எரிகோ என்னும் பட்டணத்திற்கு வந் தபோது, திரளான ஜனங்கள் அவரை பின்பற்றினார்கள். அந்த வேளையிலே பர்திமேயு என்கிற ஒரு குருடன், வழியருகே உட்கார்ந்து, பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரெ ன்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத்தொடங்கினான். அநேகர் அவனை அதட்டி பேசாதி ருக்கச் செய்யும்படி எத்தனித்தார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான். அந்த ஏழையின் குரலைக் கர்த்தர் கேட்டார். அவன் சரீரத்திலே குருடனாக இருந்தபோதும், அவனுடைய விசுவாசக் மனக்கண்கள் வெளிச்சமாக இருந்தது. இயேசு யார் என்பதை அறிந்த அவனின் விசுவாசத்தை, அவனை அதட்டுகின்றவர்களினால் அடக்கி வைக்க முடியவில்லை. அந்த திராளான ஜனங்கள் மத்தியிலும் இயேசு நின்று, அவனை அழைத்து வரச் சொன்னார். இயேசு அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்றார். அதற்கு அந்தக் குருடன்: ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித் தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, இயேசுவுக்குப் பின் சென்றான். பெரியவர்கள், உயர்ந்தவர்கள், பிரபல்யமானவர்கள் என்று திரளானவர்கள் இன்றும் இயேசுவை பின்பற்றி செல்கின்றார்கள். ஆனாலும் இயேசு சிறுமைப்பட்டவர்களின் வேண்டுதலை கேட்கின்றார் இந்த உலகத்தினால் அற்பமாக எண்ணப்படும் மனிதர்களின் கூப்பி டுதலுக்குச் செவி கொடுக்கின்றார். எனவே உங்கள் உள்ளான மனித னிலே இருக்கும் விசுவாசத்தை தளரவிடாதிருங்கள். பொறுமையை இழந்து விடாமல், தேவனுக்கு காத்திருங்கள்.

**மாற்கு 10:52**

**இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்**

**ஜெபம்:** உம்மை நோக்கி கூப்பிடும் ஒருவரையும் தள்ளாத தேவனே, என் சிறுமையிலும் உம்மைக் குறித்த விசுவாசத்தில் தளர்ந்து போய் விடாமல், உம்முடைய வேளைக்காக காத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**ஞாயிறு | வைகாசி 17** 📖 மாலை வாசகம் – 1 தெச 5:6

# உணர்வுள்ள ஜீவியம்

தன்னுடைய பிள்ளைகளை நேசிக்கும் தகப்பன் ஒருவன், பிள்ளைகளின் நலனுக்காக பல தியாகங்கள் மத்தியிலே கடுமையாக உழைத்து வந்தான். தன் பிள்ளைகள், தமது வாழ்க்கையின் கருப்பொருளை உணர்ந்து, பொறுப்புள்ளவர்களாக செயற்பட வேண்டும் என்பதையே தகப்பனார் விரும்பினார். ஆனால் பிள்ளைகளோ, தந்தையாருடைய நன்மைகளை பெற்றுக்கொண்டு, அடுத்த வார இறுதியில் எங்கே செல்லலாம்? வேடிக்கையாக (fun) என்ன செய்யலாம்? வீட்டிலே என்ன விளையாட்டுக்களை விளையாடலாம்?வசந்தகாலவிடுமுறையில் எங்கே உல்லாசப் பயணம் செல்லப் போகின்றோம் என்பதைப் பற்றி பேசுவதிலும், திட்டம் போடுவதிலும், அவைகளை செய்வதிலுமே அதிக நேரத்தை செலவிட்டார்கள். இதனால் மனவேதனை அடைந்த தகப்பனார், சில மாதங்களுக்கு வெளியே நடக்கும் நிகழ்ச்சிகள் ஏதும் இல்லை, உங்கள் அறைகளிலே இருந்து வாழ்க்கையைப் பற்றி சிந்தியுங்கள் என்று பிள்ளைகளை கண்டித்தார். ஆனால், அறைவீட்டுக்குள் இருக்கும் பிள்ளைகளோ, தங்கள் வாழ்க்கையைப் பற்றி சிந்திப்பதற்கு பதிலாக, இன்ரநெற் ஊடகங்களிலே தங்கள்நேரத்தை செலவிட்டார்கள். பிரியமானவர்களே, இது எங்கள் பிள்ளைகளை பற்றியதல்ல! இது எங்களைப் பற்றியது. எங்கள் பரமபிதா எங்களுக்கு பெரிதான அழைப்பை தந்திருக்கின்றார். எனவே வாழ்வின் கருப்பொருளை உணர்ந்தவர்களாக, அந்த அழைப்பிற்கு பாத்திரராக நாங்கள் நடந்து கொள்ள வேண்டும். எங்கள் பரமபிதா, எங்களை தண்டித்து கண்டிக்கும் போது (சிட்சிக்கும் போது), நாங்கள் உணர்வடைய வேண்டும். கல்வியை கடுமையாக கற்று, கௌரவமான வேலை செய்து, கை நிறைய சம்பாதித்து, வயிறாற உண்டு, உல்லாசமாக வாழ்ந்து, மிகுதியாக இருக்கும் சொற்ப நேரத்தில் மட்டும் தேவனை குறித்து சிந்திப்பது கிறிஸ்த வாழ்க்கை ஆகுமா? இந்த உலகிலே அழிந்து கொண்டிருக்கும் பல ஆத்துமாக்களின் மத்தியிலே, அழியாத வாழ்வை பெற்றுக் கொள்ளும்படி மகத்துவமாக அழைப்பை பெற்ற நாம் அசட்டையாக இருக்கக் கூடாது. கடந்த சில நாட்களாக தியானத்திலே குறிப்பிட்டப்பட்டதைப் போல, எங்கள் வாழ்க்கையின் எல்லாக் கட்டத்திலும், விசுவாசத்தை விட்டு விலகாமல் உணர்வுள்ள வாழ்க்கை வாழ வேண்டும். இயேசு மறுபடியும் வரும் போது, அவர் முன்னிலையிலே ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு விழிப்புள்ளவர்களாக வாழ்வோம்.

**லூக்கா 18:8**

ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்.

**ஜெபம்**: நித்திய வாழ்வு தரும் தேவனே, இந்த பூவுலகிலே வாழும் நாட்களிலே, காலங்களை உணர்ந்து, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்தில் வாழும்படி என்னை உணர்வுள்ளவனா(ளா)க்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**திங்கள் | வைகாசி 18** 📖 மாலை வாசகம் – ஏரேமியா 17:7–8

# செழிப்பான வாழ்க்கை

மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வறட்சி ஏற்படுவதால், தாவரங்களுக்கு வேண்டிய ஊட்டச் சத்துக்களும் கனிப்பொருட்களும் கிடையாததினால், பல தாவரங்கள் அதினதின் காலத்தில் பலைனக் கொடுப்பதில்லை. ஆவிக்குரிய வாழ்க்கையில் ஏற்படும் வறட்சி என்பதைக் குறித்து இன்று தியானம் செய்வோம். “கர்த்தரை அறிய முன்பு வறுமையில் கிடந்தோம் ஆனால் இப்போது உலக ஐசுவரியத்தினால் நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றோம்” இதை செழிப்பின் வாழ்வு என்று சிலர் கூறிக்கொள்வதுண்டு. கர்த்தர் மனிதர்களை உலக ஆஸ்திகளால் ஆசீர்வதிப்பது என்பது உண்மை, ஆனால் உலக ஆசீர்வாதம் ஒருவரிடம் இருப்பது ஆவிக்குரிய செழிப்பு அல்ல. ஒருவன் ஐசுவரியமுடையவனாக இருக்கலாம், இன்னுமொருவன் சாதாரண குடிமகனாக இருக்கலாம், மற்றுமொருவன் ஏழையாக இருக்கலாம் ஆனால் “நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருப்பதே” மிகுந்த கனிகளை கொடுக்கும் செழிப்புள்ள வாழ்க்கை என்று இயேசு கூறியிருக்கின்றார். “நானே ஜீவ அப்பம், நானே ஜீவ தண்ணீர்” என்று இயேசு கூறியிருக்கின்றார். அவரிலே நிலைத்திராதவன் தன் ஆவிக்குரிய வாழ்க்கைக்குரிய ஊட்டச் சத்திலிருந்து, தன்னை துண்டித்துக் கொள்வதால், தன் வாழ்க்கையில் வறட்சியை ஏற்படுத்திக் கொள்கின்றான். அவன் ஐசுவரியவானாக இருந்தாலும், சாதாரண வாழ்க்கை நடத்துபவனாக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் அவன் வாழ்வில் இயேசு இல்லையென்றால் அந்த வாழ்க்கை கனியற்ற வறண்ட வாழ்க்கை. எனவே இந்த உலகத்தின் ஐசுவரியத்தின் மேல் ஆசை வைத்த மனிதர்கள், விசுவாசத்தை விட்டு விலகிச் சென்ற போதும், தாங்கள் பின்மாற்றமான வாழ்க்கை வாழ்கின்றோம் என்பதை உணரால், தாங்கள் செழிப்பான வாழ்க்கையே வாழ்கின்றோம் என்ற ஐசுவரியத்தின் மயக்கத்தினால் உணர்வு அற்றவர்களாக மாறியிருக்கின்றார்கள். எனவே, நாங்கள் உலக ஐஸ்வரியம் உடையவர்களாக இருந்தாலும், சாதாரண வாழ்க்கை வாழ்ந்தாலும், ஏழைகளாக இருந்தாலும், தேவ வார்த்தையில் நாங்கள் நிலைத்திருந்தால், எந்நிலையிலும் பிதாவாகிய தேவனின் சித்தத்தை நிறைவேற்றுகின்ற உணர்வுள்ள வாழ்க்கை வாழ்கின்றவர்களாக இருப்போம்.

**யோவான் 15:6**

**இயேசு: ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்.**

**ஜெபம்**: சகலமும் படைத்த தேவனே, உம்முடைய வார்த்தையிலே நிலைத்திருந்து, அதன் வழியிலே வாழ்வதே செழிப்புள்ள வாழ்க்கை என்பதை உணர்ந்து கொள்ளும் இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | வைகாசி 19 | 📖 மாலை வாசகம் – யோசுவா 24:15

# மார்க்கம் தப்பி நடப்போர்...

தன்னுடைய இறுதி நாட்கள் அண்மித்திருக்கின்றது என்று அறிந்த தகப்பனார், தன் மூத்த மகனை அழைத்து, நான் கடந்து சென்ற பின்பு, உன் தம்பியை நீ விசாரித்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். மூத்தவனோ, தன் தம்பியானவன், தன் இஷ்டப்படி ததாக நண்பர்களோடு சேர்ந்து பாடசாலை நாட்களை விரையப்படுத்தினான் என்றும், ஆனால் நீங்களோ தம்பியைப் குறித்தே கரிசனையுள்ளவராக இருக்கின்றீர்கள் என்று தன் தந்தையிடம் கூறினான். மகனே, உன் வாழ்வை குறித்த மகிழ்ச்சி என் இருதயத்திற்கு எப்போதும் ஆறுதல். உன் தம்பி, தன் வாழ்வை கெடுத்துக் கொண்டது உண்மை. ஆனாலும் அவனும் என்னுடைய மகனே. உன்னுடைய சகோதரன் கூட. அதனால், அவன் ஒரு நாள் உணர்வடைந்துகொள்ளும் போது, “என்னுடைய அண்ணன் எப்படியும் என்னை புறக்கணிக்காமல் ஏற்றுக் கொள்வான்” என்ற நம்பிக்கை, உன் தம்பியின் உள்ளத்தில் இருக்கும்படிக்கு, ஒருவழியை ஏற்படுத்தி வைத்துக் கொள். நீ மட்டுமல்ல அவனும் நித்திய வாழ்வை அடைந்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை கூறினார். ஆம் பிரியமானவர்களே, நானும் என் வீட்டாரும் கர்த்தரையே சேவிப்போம் என்பதன் பொருளை அறிந்து கொள்ளவேண்டும். முதலாவதாக, நான் என் ஆத்துமாவை எந்த விதத்திலும் கெடுத்து கொள்ளக் கூடாது. இரண்டாவதாக, யாவரும் மனந்திரும்பி தேவனிடத்திற்கு திரும்ப வேண்டும் என்கின்ற பாரம் மனதில் உருவாக வேண்டும். “என் வாழ்வு ஆரோக்கியமாக உள்ளது. என் குடும்பம் பக்தியாயுள்ளது, நான் தேவனோடு இருக்கின்றேன்” என்று நாங்கள் பெருமை அடைய முடியாது. கண் கண்ட சகோதரனை அன்பு செய்யாதவன், கண் காணாத தேவனை எப்படி சேவிக்க முடியும்? ஒரு சகோதரன் தன் தீர்மானத்தின்படி தன் வாழ்வை கெடுத்துக் கொள்ளும் போது, அவனுடைய தவறான வழிகளுக்கு நாங்கள் உடன்பட்டவர்கள் அல்ல. ஆனால் நாங்கள் அவனைக் குறித்து சாபமான வார்த்தைகளைப் பேசாமல், அவன் மோசம் போகாமல், சத்திய மார்க்கத்திற்கு திரும்ப வேண்டும் என்ற எண்ணத்துடன் தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ண வேண்டும். ஒருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதே தேவனுடைய அநாதி தீர்மானம்.

**யாக்கோபு 5:20**

தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து,திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்

**ஜெபம்**: என்னை தேடி வந்த தேவனே, சத்திய மார்க்கத்தை விட்டு, உலகத்தின் வழியில் நடப்போரை உம்முடைய சத்திய வழிக்குள் திருப்ப வேண்டும் என்ற உணர்வுள்ள இருதயத்தை எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | வைகாசி 20

📖 மாலை வாசகம் – ஆதியாகமம் 18:17 – 18

# அறிவும், அந்தஸ்தும், சௌந்தரியமும்

பாபிலோனின் ராஜா, எருசலேமைக் கைப்பற்றிய போது, இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசு இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரை கொண்டுவரவும், அவர்களுக்குக் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக்கொடுக்கவும் ராஜா கட்டளை கொடுத்தான். அவர்களுக்குள் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களும் உள்ளடங்குவார்கள். பாபிலோனிலே இப்படியாக தேர்ச்சிபெற்ற அநேகர் இருந்தார்கள். ஒரு நாள், ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் சொப்பனங்களைக் கண்டான் அதினால், அவனுடைய ஆவி கலங்கி, அவனுடைய நித்திரை கலைந்தது. அப்பொழுது ராஜா, நாட்டிலுள்ள தேர்ச்சி பெற்ற யாவரையும் அழைத்து. தான் அவர்களை நோக்கி: என்னிடத்திலிருந்து பிறக்கிற தீர்மானம் என்னவென்றால், நீங்கள் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்கு அறிவியாமற்போனால் துண்டித்துப்போடப்படுவீர்கள் உங்கள் வீடுகள் எருக்களங்களாக்கப்படும் என்றான். ராஜ சாமுகத்தில் சேவை புரிகின்றவர்கள், தோற்றத்தில் அழகானவர்கள், ராஜ குலத்தவர்கள், அறிவில் சிறந்தவர்கள் ஆனால் அவர்களில் எவருக்குமே, இந்த உலகத்தினால் உண்டான தகுதிகளினால் சொற்பனத்தை தெரிவிக்க முடியவில்லை. தானியேல், ராஜாவினிடத்தில்போய், சொப்பனத்தின் அர்த்தத்தை ராஜாவுக்குக் காண் பிக்கும்படித் தனக்குத் தவணை கொடுக்க விண்ணப்பம் பண்ணினான். தானியேலும் மேற்கூறிய உலக தகுதிகளையுடைய வாலிபனாக இருந்தான். அந்த தகுதிகள் எதுவும் அவனுக்கு உதவவில்லை. அவன் தேவனை நோக்கிப் பார்த்தான். உன்னதத்திலுள்ள தேவன் தம்முடைய இரகசியங்களை தானியேலுக்கு வெளிப்படுத்தினார். பிரியமானவர்களே, தேவ இரகசியங்களை அறிந்து கொள்வதற்கு உலக அறிவும், சமுதாய அந்தஸ்தும், சௌந்தரியமும் அவசியமானதல்ல. தேவனுக்குப் பயந்து அவருடைய வழிகளில் நடக்கின்ற மனிதனுக்கு அவர் தமது இரகசியங்களை வெளிப்படுத்துவார்.

**தானியேல் 2:11**

**ராஜா கேட்கிற காரியம் மிகவும் அருமையானது மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம்பண்ணாத தேவர்களேயொழிய ராஜசமுகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை என்றார்கள்.**

**ஜெபம்**: எங்களுக்குள்ளே வாசம் செய்யும் தேவனே, இந்த உலக தகுதிகளினாலே இழுப்புண்டு போகாதபடிக்கு, உமக்கு பயந்து உமது வழிகளிலே நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு. பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு. இப்படியாக, சன்மார்க்கனுக்கும் துன்மார்க்கனுக்கும், நற்குணமும் சுத்தமுமுள்ளவனுக்கும் சுத்தமில்லாதவனுக்கும், பலியிடுகிறவனுக்கும் பலியிடாதவனுக்கும், நல்லவனுக்கு எப்படியோ பொல்லாதவனுக்கும் அப்படியே ஒரேவிதமாய்ச் சம்பவிக்கின்றது. “அவனும் இந்த உலகிலே பிறந்தான், நானும் பிறந்தேன், அவனும் வாழ்கின்றான், நானும் வாழ்கின்றேன், அவனும் இந்த உலகத்தைவிட்டு மரித்துப் போவான், நானும் அப்படியே மரித்துப் போவேன்” என்று தான் தாபரிக்கும் ஊரை அறியாத மனிதன் கூறிக் கொள்வான். “அவனை பாருங்கள், எவ்வளவு, நன்மைகள் செய்தான், நல் வழியிலே வாழ்ந்தான், இறுதியில் என்னத்தைக் கண்டான், இந்த உலகிலே என்னத்தை அனுபவித்தான், அவனுக்கு இப்படியாக சம்பவித்துவிட்டதே” என்றும் தாங்கள் வாழ்கின்ற பிரகாரமாக கண் போன போக்கில் வாழ்வோம் என்று மனிதர்களுடைய இருதயம் அகங்காரமாக, மேட்டிமையானவைகளை பேசுவதுண்டு. பாவமறியாத கருணை நிறைந்த எங்கள் மீட்பராகிய இயேசு சிலுவையிலே தொங்கிய போது, அவரைப் பார்த்து: மற்றவர்களை இரட்சித்தான் தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை. இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம் என்று இயேசுவை நிந்தித்தார்கள். அப்படி நிந்தித்தவர்கள் கர்த்தரை அறியாதவர்கள், இவர்கள், தங்கள் மனம் போன போக்கில் வாழ்பவர்கள். தாங்கள் நினைத்தபடி தேவன் காரியங்களை நடப்பிக்க வேண்டும் என்ற சிந்தையுடையவர்கள். துன்மார்க்கன், சன்மார்க்கன், நல்லவன், கெட்டவன் என்ற பாகுபாடில்லாமல், யாவரும் இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்ல வேண்டும் என்பது உண்மை. ஆனால் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. அதாவது நித்திய ஜீவனை சுதந்தரிக்க, அல்லது நித்திய அக்கினியில் பங்கடைய ஒரு நாள் உண்டு. அந்நாளிலே பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றிய நீதிமான்கள் நித்திய ஜீவனுக்குள் கடந்து செல்வார்கள்.

**மத்தேயு 25:46**

அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்

**ஜெபம்:** பிதாவாகிய தேவனே, உம்முடைய குமாரனுடைய விலை மதிக்க முடியாத இரத்தத்தினாலே எங்கள் பாவங்களை கழுவி, நீதிமான்களாக்கினீர். இந்தப் பாக்கியத்தை முடிவு பரியந்தம் காத்துக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விசுவாச மார்க்கத்தாரின் வாழ்வு

அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். இவர்கள் விசுவாச மார்க்க த்தார், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தாலே கழுவப்பட்ட நீதிமான்கள். தேவ பக்தியாய் நடக்கின்ற நீதிமான்களுக்கு ஏற்படும் துன்பம் அவர்களுடைய அநீதியினால் உண்டாவதில்லை. அவை நீதியின் நிமித்தம் உண்டாகும் உபத்திரவங்கள். ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களிலே, தேவ ஊழியராகிய பேதுரு விசுவாச மார்க்கத்தாருக்கு கூறியதாவது: "கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல் மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள். சென்ற வாழ்நாட்காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டது போதும் அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம். அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள்." இயேசு கிறிஸ்து நமக்காக பாடுகளை சகித்தார், எனவே அவருடைய சுவிசேஷம் எங்கள் வாழ்க்கை வழியாக மற்றவர்களுக்கு பிரஸ்தாபம் பண்ணப்படும்படிக்கு, நாங்களும் கிறிஸ்துவின் சிந்தையை ஆயுதமாகத் தரித்தவர்களாக காணப்பட வேண்டும். எனவே எங்கள் வாழ்க்கையில் பாடுகள் ஏற்படும் போது, கலகங்களை ஏற்படுத்தாமல், அவற்றை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். தீமை செய்ததினால் பாடுகள் ஏற்பட்டிருந்தால், எங்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டு மனந்திரும்பி சிலுவையின் நிழலிற்கு திரும்ப வேண்டும். நன்மை செய்வதினால் பாடுகள் ஏற்பட்டிருந்தால், இப்படிப்பட்ட பாடுகள் எங்களுக்கு முன் கடந்து சென்றிருக்கும் நீதி மான்களின் வாழ்க்கையிலும் ஏற்பட்டது. எனவே அவை யாவற்றின் மத்தியிலும், அவர்கள் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி வெற்றி சிறந்தார்கள் என்பதை உணர்ந்தவர்களாக, கிறிஸ்து இயேசுவின் சாயல் எங்களில் வெளிப்படும்படிக்கு பொறுமையோடே காத்திருப்போம். இப்படிப்பட்ட வாழ்க்கை நீதிமானுக்குரியது. கர்த்தருடைய கண்கள் இப்படிப்பட்டவர்கள் மேல் நோக்கமாயிருக்கின்றது.

**1 பேதுரு 3:16**

**கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது.**

**ஜெபம்:** பரலோக தேவனே, நீதிபரராகிய இயேசு கிறிஸ்து எங்களுக்காக பாடுகளை சகித்தது போல நாங்களும் நன்மை செய்து பாடு அனுபவிக்கின்ற மனநிலையுடையவர்களாகும்படி வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தவறிப் போகும் நேரங்களில்

ஒரு சபை ஐக்கியத்திலே, அநேக வருடங்களாக தேவனை ஆராதித்து வந்த வயதான ஐயா ஒருவர், சக விசுவாசியுடன் ஏற்பட்ட கரு த்து முரண்பாட்டினாலே, நிலை தவறி, சக விசுவாசியை கடுஞ் சொற்களால் கடிந்து கொண்டார். வயதிலே முதிர்ந்தவரை எப்படி எதிர்த்துப் பேசுவது என்று, மற்ற விசுவாசியும் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டார். சில நாட்கள் சென்ற பின், அந்த வயதானவர், தான் பேசிய வார்த்தைகளை குறித்து மிகவும் மனவருத்தப்பட்டார். சந்தர்ப்பம் கிடைத்த போது, மற்றய விசுவாசியின் வீட்டிற்கு சென்று, தான் தவறு செய்தேன் என்று அறிக் கையிட்டு, தன்னை மன்னித்துக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டார். ஐயா, நீங்கள் என்னுடைய தகப்பன் போன்றவர், இப்படியெல்லாம் மன்னிப்பு கேட்பதானது, எதற்கு என்று சக விசுவாசி கூறினான். தம்பி, எத்தனை வயதாகினாலும், எங்களது வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானங்களும் கர்த்தருடைய சமுகத்திலே பிரியமாக இருக்க வேண்டும் என்று அந்த இளம் விசுவாசியுடன் ஒப்புரவாகினார். நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான். அது சிறிய காரியமாக இருந்தாலும், பெரிய காரியமாக இருந்தாலும், அவன் தன் தேவனை நம்பியிருப்பதால், சத்திய ஆவியானவர், மெய் வழியிலே அவனை நடத்திச் செல்வார். அவனுடைய மனம் தேவனோடு இசைந்திருப்பதால், தன் குற்றங்களை பாராமுகமாக விட்டுவிடாமல் அவற்றை அறிக்கையிட்டு சீர்பொருந்துகின்றான். தன்னைத் தானே தேவ சமுகத்திலே தாழ்த்துவதைக் குறித்து வெட்கமடையான். ஆனால், தான் அறிந்தோ அறியாமலோ தன் சகோதரருக்கு செய்யும் தவறுகளைக் குறித்து அவன் வெட்கமடைகின்றான். பிரியமானவர்களே, தவறுகள் செய்யாமல், ஞானமுள்ளவர்களாய் நடந்து கொள்வதே நன்மையானது. ஆனால் எங்கள் வாழ்க்கையில்: எங்கள் குடும்பத்தில், வேலை செய்யும் இடத்தில், வெளியிடங்களில், கல்வி கற்கும் நிலையங்களில், நண்பர்கள் உறவினர்கள் மத்தியில், சபை ஐக்கியத்தில் நாங்கள் தவறிப் போகும் சூழ்நிலைகள் உண்டாகும் போது, நாம் அந்த தவறுகளை ஏற்றுக் கொண்டு, மனந்திரும்புவதும், நம் வாழ்க்கையை வேத வாக்கியங்களின்படி ஆராய்ந்து, சீர்படுத்திக் கொள்வதும், மறுபடியும் எழுந்திருப்பதும் நீதிமான்களின் பண்பாக இரு க்கின்றது.

**நீதிமொழிகள் 24:16**

நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும்திரும்பவும் எழுந்திருப்பான் துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்.

**ஜெபம்:** நீதியின் தேவனே, நான் தவறிப் போகும் சந்தர்ப்பங்களில், மனதை கடினப்படுத்தாமல், சம்மந்தப்பட்ட சகோதர சகோதரிகளோடு ஒப்புரவாகிக் கொள்ளும் உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்து வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீதிமான்களின் கூடாரம்

நீதியைப் பின்பற்றுகின்ற உத்தம மார்க்கத்தாரை கர்த்தர் நேசிக்கின்றார். உத்தம மார்க்கத்தார் தங்கும் வீடடிலே, சொந்த புருஷனைக் குறித்த கனம் மனைவிக்கு இருக்கும். தன் மனைவியை குறித்த அன்பு புருஷனிடத்தில் இருக்கும். பெற்றோருக்கு கீழ்ப்படியும் கீழ்ப்படிவு பிள்ளைகளிடத்தில்இருக்கும். தங்கள் பிள்ளைகள் பெலனற்றுப் போகாதபடி, அவர்களை தேவ வழியில் நடத்தும் போதனை பெற்றோரிடம் இருக்கும். தங்கள் தாய் தந்தையரை விசாரிக்கும் அன்பு, பிள்ளைகளிடத்தில் இருக்கும். உத்தம வழியிலே நடக்கின்ற மனுஷன், எப்போதும் கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்துப் பார்க்கின்றான். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவன் அவைகளை கடிந்துகொள்வான். அங்கே துன்மார்க்கருடைய ஆலோசனைக்கும், பாவிகளுடைய வழிகளுக்கும் இடமில்லை. உத்தம மார்க்கத்தார் தங்குமிடத்தில் பரியாசக் காரருக்கு இடமில்லை. அவனுடைய வீட்டிலே கூக்குரல்களுக்கும் சண்டைகளுக்கும் வாக்குவாதங்களுக்கும் இடமில்லை. அவன் தேவனைத் தன் தாபரமாக கொண்டிருப்பதால், எந்த சூழ்நிலையிலும் அவனுடைய வீட்டிலே துதியின் சத்தம் கேட்கும். இரட்சிப்பின் கெம்பீர சத்தம் இருக்கும். அவன் கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவனாகையால் அவன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். (சங்கீதம் 128). இது நீதிமானுடைய கூடாரம்! அவன் ஆவிக்குரிய வைகளையே சிந்தித்துக் கொண்டிருப்பான். துன்மார்க்கனுடைய வழி கர்த்தருக்கு அருவருப்பானது. அவர்கள் எப்போதும் தங்கள் மாம்ச இச்சையை நிறைவேற்ற மனதாயிருப்பார்கள். தங்கள் துன்மார்க்க உளையிலே அவர்களோடே கூட நீதிமான் விழாமலிருக்கிறதினாலே துன்மார்க்கர் ஆச்சரியப்பட்டு, நீதிமானை தூஷிப்பார்கள். துன்மார்க்கனுடைய வழி கர்த்தருக்கு அருவருப்பானது. அங்கே காமவிகாரத்திற்கும், துர்இச்சைகளுக்கும், மதுபானம்பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனை செய்வதற்கு இடமுண்டு. (1 பேதுரு 4:3). இது துன்மார்க்கர் தங்கும் ஆகாமியக் கூடாரம். பிரியமான சகோதர சகோதரிகளே, எங்கள் வீடுகளிலே இரட்சிப்பின் ஆனந்த சந்தோஷத்தின் தொனி முழங்கட்டும். தெய்வீக சுபாவங்கள் எங்கள் வாழ்க்கையின் வழியாக வெளியாகட்டும்.

**சங்கீதம் 118:15**

**நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, துன்மார்க்கரின் வழிகளை தெரிந்து கொள்ளாமல், நீர் எங்களுக்கு காட்டும் ஜீவ வழியிலே நான் முன்னேறிச் செல்ல எனக்கு பெலன் ஈந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| திங்கள்| வைகாசி 25 | 📖 மாலை வாசகம் - 2 கொரி 10:4 -5 |
| --- | --- |

# நான் தனித்து விடப்பட்டேனா?

என்னுடைய வீட்டிலே நான் மட்டுமே இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கின்றேன். தற்சமயம், மற்றவர்கள் யாவரும் இதற்கு எதிர்த்து நிற்பதினால், வீட்டிலே அநாவசியமற்ற தர்க்கங்கள் நடைபெறுகின்றது என்று ஒரு மனிதன் கூறிக் கொண் டான். சில குடும்பங்களிலே கணவன் மட்டும் இரட்சிப்படைந்திருக்க லாம், வேறு சில குடும்பங்களில் மனைவி மாத்திரம் இரட்சிப்படைந்திருக்கலாம். சில இடங்களிலே, பிள்ளைகள் மட்டும் இரட்சிப்படைந்திருக்கலாம். இந்த சூழ் நிலைகளில் குடும்பங்களிலே கருத்து முரண்பாடுகளுக்கும், தர்க்கங்களுக்கும் இடமுண்டாகலாம். முதலாவதாக, விலைமதிக்கமுடியாத மீட்பராகிய இயேசுவின் பரிசுத்த இரத்தத்தினாலே, பாவமறக்கழுவப்பட்டு, நீதிமானாக மாற்றப்பட்டிருக்கின்றேன் என்பதை இர ட்சிப்படைந்த சகோதரனாவது அல்லது சகோதரியாவது திட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். அடுத்ததாக, எந்த சந்தர்ப்பத்திலும், எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருப்பதால், அவைக ளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோ தமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்க ளாயிருக்கிறோம் என்ற சத்தியத்தை நீதிமான்களாகிய நாங்கள் கைக்கொள்ள வேண்டும். சரீரத்திலே நிந்தனைகளையும் பாடுகளையும் சகிக்க நேர்ந்தாலும், அமைதலுள்ள ஆவியினாலும், தேவனுடைய வார் த்தையைத் தியானிப்பதினாலும், ஜெப வேண்டுதலினாலும், **தன்னு டைய இருதயத்தில்** கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்ப ண்ணுவதாலும் தன் ஆன்மீக மகிழ்ச்சியை காத்துக் கொள்வான். முற் காலத்திலே அந்தகார கிரியைகளுக்கு உட்பட்டிருக்கும் போது, மாம்ச இச்சையின்படி தர்க் கங்களை செய் தோம், இப்போதோ ஒளியின் பிள்ளைகளாக நாம் இரு ப்பதால், தேவனை இன்றும் அறியாதவர்கள் போல மாம்சத்தின் இச்சை களின்படி போராடக் கூடாது. இப்படியான சூழ்நிலைகளிலே எங்கள் இருதயத்தை துன்மார்க்கத்தின் களமாக மாற்றிக் கொள்ளாமல், நீதி யின் கூடாரமாக காத்துக் கொள்ள வேண்டும்.

**எபேசியர் 5:8**

முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள் இப்பொழுதோ கர்த்தரு க்குள் வெளிச்சமாயிருக் கிறீர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்.

**ஜெபம்**: என் நிலையை நன்றாக அறிந்த தேவனே, நான் மாம்சத்திலே துர்கிரியைகளை எதிர்த்துப் போராடாமல், தேவ ஆவியின் வல்லமையி னால் ஞானமாக நடந்து கொள்ளும் உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**செவ்வாய் | வைகாசி 26** 📖 மாலை வாசகம் – சங்கீதம் 37:17 – 19

# என் தவிப்பை யார் அறிவார்

என்னுடைய நிலையை யார்தான் புரிந்து கொள்வார்கள்? விளக்கிக் கூறுவதற்கு வார்த்தையோ பெலனோ என்னிடம் இல்லை என்று ஒரு தாயானவள் கூறிக் கொண்டாள். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் மனிதர்களுடைய வாழ்வில் ஏற்படுவதுண்டு. நான் காரியத்தை விளக்கிக் கூறினால் என்னை நியாந்தீர்த்து தள்ளிவிடுவார்கள். காரியத்தை விளக்கிக் கூறாவிட்டால், வஞ்சனை உன் இருதயத்தில் இருக்கின்றது என்று சொல்வார்கள். சில வேளைகளிலே, கையளவு எண்ணிக்கையுள்ள மனிதர்கள் ஓரளவிற்கு என்னை புரிந்து கொள்ளலாம் ஆனால் அதற்கும் ஒரு வரையறை உண்டு. அதாவது, நான் எந்த குற்றமும் செய்யாத பரிசுத்தன் என்பது அல்ல, ஆனால் என் நிலையை யாராவது புரிந்து கொண்டு, இந்த இக்கட்டில் இருந்து என்னை விடுவிக்க வழிகாட்ட யாரும் இல்லையா என்பது சிலரின் ஆதங்கம். தாவீது என்னும் தேவ பக்தனுக்கும் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது. அவனும் "என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது. என் மாம்சத்தில் ஆரோக்கியம் இல்லை. நான் பெலனற்றுப்போய், மிகவும் நொறுக்கப்பட்டேன் என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன். என் உள்ளம் குழம்பி அலைகிறது. என் பெலன் என்னை விட்டு விலகி, என் கண்களின் ஒளி முதலாய் இல்லாமற்போயிற்று. என் சிநேகிதரும் என் தோழரும் என் வாதையைக் கண்டு விலகுகிறார்கள் என் இனத்தாரும் தூரத்திலே நிற்கிறார்கள். என் பிராணனை வாங்கத்தேடுகிறவர்கள் எனக்குக் கண்ணிகளை வைக்கிறார்கள் எனக்குப் பொல்லாங்கு தேடுகிறவர்கள் கேடானவைகளைப்பேசி, நாள்முழுதும் வஞ்சனைகளை யோசிக்கிறார்கள்" என்று தன் நிலையை தேவனிடம் கூறினார். எனினும் தன் ஏக்கமெல்லாம் தேவனுக்கு முன்பாக இருக்கிறது என்பதையும் தன் தவிப்பு தேவனுக்கு மறைவாயிருக்கவில்லை என்ற உண்மையையும் அறிந்திருந்தார். பிரியமானவர்களே, உங்களுடைய தனிப்பிட்ட நிலை பிரத்தியேகமானதாக இருக்கலாம். ஆனால் கர்த்தர் மாறாதவராயிருக்கின்றார். நீதிமான்கள் கூப்பிடும் போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார். நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.

**சங்கீதம் 38:9**

ஆண்டவரே, என் ஏங்கலெல்லாம் உமக்கு முன்பாகஇருக்கிறது என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை.

**ஜெபம்**: உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, என் நிலையை வாழ்வின் நிலைமையை நீர் நன்றாய் அறிந்திருக்கின்றீர். உமக்காக காத்திருக்கின்றேன், நீர் என்னை விடுவித்து காத்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வைராக்கியம் பாராட்டுதல்

**அப்போஸ்தலர் 9:6**

**ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான்.**

சவுல் என்னும் மனிதன் (பின்பு பவுல் என்று அழைக்கப்பட்டவர்), கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படிக்கு பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய் அனுமதி பெற்று, பிரயாணமாய்ப் போய், தமஸ்கு வுக்குச் சமீபித்தபோது சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவ னைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். அப் பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னு டனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்: ஆண்ட வரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக் குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். ஆண்டவருடைய சித்தப்படி, பவுல் செய்ய வேண்டிய காரியங்கள் என்ன என்று அறிவிப்பதற்கு அனனியா என்னும் ஊழியன் கர்த்தரால் அனுப்பப்பட்டார். சற்று சிந்தித்துப் பாருங்கள்! யூத மதத் தலைவர்களால் அங்கீகாரம் பெற்ற மனிதன், தன் மதத்தை குறித்து வைராக்கியமுள்ளவர், கல்வி அறிவில் சிறந்தவர், சட்டநூலின்படி குற்றம் செய்யாதவர், சமுக அந்தஸ்திலே உயர்ந்தவர், இவை யாவும் இருந்தும் அவர் தன்னைக் குறித்த தேவ சித்தம் என்ன என்பதை அறிய முடியாதவராகவும், தேவனுடைய சித்தத்திற்கு தங்களை ஒப்புக் கொடுத்தவர்களை துன் புறுத்துகின்றவ ராகவும் இருந்தார். சற்று எங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்போம். எங்களுடைய தகைமைகள் என்ன? வருடங்கள் கடந்து செல்லும் போது, எங்களுடைய வாழ்வில் இருக்கும் மத வைராக்கியத்தை அல்லது எங் கள் தகைமைகளை தேவ பக்தி என்று எண்ணிக் கொண்டிருக்கலாம். நாங்கள் எப்போதும் தேவனுடைய சித்தம் என்ன என்பதை அறிந்து அதை நிறைவேற்றுகின்றவர்களாக வாழ வேண்டும். தேவனுடைய பாதத்திலே தனித்திருந்து விண்ணப்பம் பண்ணி ஊக்கத்தோடு அவரு டைய சித்தம் என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இயேசுவே, இப்போது என் வாழ்வில் நான் என்ன செய்ய வேண்டும் என நீர் சித் தமாயிருக்கின்றீர் என்று அவரிடம் கேட்கும் போது, தேவ ஆவியான வர் தாமே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று எங்களுக்கு கற்றுத் தருவார்.

**ஜெபம்**: அநாதி தீர்மானத்தின்படி அழைத்த தேவனே, என் வாழ்வில் உம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதை குறித்து எப்போதும் விழிப்பு ள்ளவனாக இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**வியாழன் | வைகாசி 28** 📖 மாலை வாசகம் – லூக்கா 6:32 – 36

# உன்னதமானவரின் பிள்ளைகள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த ஐசுவரியமுள்ள மனிதன், தன்னிடத்திலே கடன்பட்டு அதை குறித்த தவணையில் செலுத்த முடியாதிருந்த சில குடியானவர்களின் கடனை முழுமையாக அவர்களுக்கு மன்னித்து விட்டான். வருடங்கள் கடந்த பின்பும், தான் மன்னித்துவிட்ட கடன் எவ்வளவு என்றும், கடனாளிகள் யார் என்றும் அவ்வப்போது கூறிக் கொள்வான். குடியானவர்களின் கடனை மன்னித்தது பாரட்டத்தக்க விடயம் ஆனால் அவற்றைக் குறித்து திரும்பத் திரும்ப பேசிக் கொள்வதினால் தன்னைத் தான் மேன்மைப் படுத்துவதோடு, மற்றவர்களின் பழைய குறைகளை புதுப்பித்து கொண்டிருந்தான். அந்த மனிதன் ஐசுவரியம் நிறைந்தவனாய் இருந்தும் குடியானவர்களின் கடனை இன்னமுமாய் மறந்து போகவில்லை. இந்த சம்பவத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள். அவ்விதமாக "அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெ ல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்த்தியாக்குகிறார் கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது." என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். எங்கள் பழைய பாவங்களைக் குறித்து அவர் மறுபடியும் நினைப்பதில்லை. ஏனெனில் அவர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன். எனவே பரம பிதாவுக்கு பிள்ளைகளாகும்படி அழைக்கப்பட்ட நாங்கள் மற்றவர்களின் குற்றங்களை மன்னித்து மறந்துவிட பழகிக் கொள்ள வேண்டும். மேலே கூறப்பட்ட சம்பவத்திலுள்ள ஐசுவரியவான், தன் பெயருக்கு மேன்மை உண்டாக வேண்டும் என்பதால் மற்றவர்களுடைய கடன்களை மன்னித்துவிட்டான். தான் உதாரத்துவமுள்ள மனுஷன் என்று தன்னுடைய செயலைக் குறித்து விளம்பரப்படுத்துவதுடன், மற்றவர்களின் பழைய வாழ்க்கையின் குறைகளை புதுப்பிக்கின்றவனாகவே வாழ்ந்து வந்தான். எங்கள் மீறுதல்களை மன் னித்து அதை நினையாமல் எங்களுக்கு மறுபடியும், இரக்கம் காண்பிப்பது எங்கள் பரலோக தந்தையின் சுபாவம். அவருடைய பிள்ளைகளாகிய நாங்களும், நம்முடைய தேவனைப் போல் தெய்வீக சுபாவத்திலே நாளுக்கு நாள் வளர்ந்து பெருக வேண்டும்.

**ஏசாயா 43:25**

**உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்.**

**ஜெபம்:** அப்பா பிதாவே என்று உம்மை அழைக்க அதிகாரம் தந்த தேவனே, உம்முடைய பிள்ளையாகிய நான், மற்றவர்களுடைய தப்பிதங்களை மன்னித்து மறந்து விடும்படி நல்ல இருதயத்தை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவன் என்னோடு இருக்கின்றாரா?

பேதுரு யோவான் என்னும் தேவ ஊழியர்கள் ஜெபம் செய்யும்படி தேவாலயத்துக்குப் போனார்கள். அப்பொழுது தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனானவன் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையும் கண்டு பிச்சைகேட்டான். ஆனால் பேதுருவும் யோவானும் அவனை உற்றுப் பார்த்து: எங்களை நோக்கிப்பார் என்றார்கள். அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி, அவர்களை நோக்கிப்பார்த்தான். அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன் நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான், உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. இன்றைய நாளிலே இந்த சம்பவத்தில் "என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகின்றேன்" என்பதைக் குறித்து தியானிப்போம். கர்த்தராகிய இயேசுவின் சீஷர்களாகிய பேதுரு, யோவனிடம் பணம் ஏதும் இருக்கவில்லை ஆனாலும் அவர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட நன்மையை மற்றவர் களுடன் பகிர்ந்து கொண்டார்கள். எங்கள் வாழ்க்கையில் நாங்கள் தேவனருளும் மாட்சிமையான மன்னிப்பை பெற்றுக் கொண்டோம். எங்கள் கடன்களை (குற்றங்களை) அவர் தயவாய் மன்னித்துவிட்டார். இன்று நாங்கள் பணத்தினாலோ, உலக சொத்துக்களாலோ ஐசுவரியமற்றவர்களாக இருக்கலாம் ஆனால் தேவனுடைய இரக்கத்தை தினமும் எம் வாழ்வில் தாராளமாக பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, எங்களிடத்தில் உள்ள நன்மைகளை மற்றவர்களுக்கு தாராளமாக வழங்குவோம். "ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்." மற்றவர்கள் உங்களுக்கு எதிராக செய்யும் குற்றங்களை அவர்களுக்கு மன்னித்துவிடுங்கள். அதை மறுபடியும் நினையாதிருங்கள். சிலர், தேவன் தங்களோடு இருக்கின்றார் என்பதை உறுதிப்படுத்த அற்புதங்களையும் அடையாளங்களையும் நாடித் தேடுகின்றார்கள். ஆனால், மன்னிப்பின் மாட்சிமையைக் குறித்த எண்ணமும், செய்கையும் எங்களுக்குள்ளே உண்டாயிருந்தால், உன்னதத்திலே வாசம் செய்யும் தேவனாகிய கர்த்தர் எங்களோடு இருக்கின்றார் என்பதற்கு அதுவே பெரிதான அடையாளமாக இருக்கின்றது.

**அப்போஸ்தலர் 3:6**

**வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்.**

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, உம்முடைய பிள்ளையாகிய நானும் உம்மைப் போல இரக்கத்திலே செல்வந்தனாக இருப்பதன் மேன்மையை உணரும்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எங்கள் ஆறுதல் வலையம்

"உங்கள் சௌகரியமான தேறுதல் வலையம் (comfort Zone) அல்லது உங்களுக்கு ஏற்றபடி இருக்கும் வாழ்க்கை வட்டத்ததைவிட்டு வெளியே வரவேண்டும், நாகரீகமானவைகளை கற்றுக் கொள்ள வேண்டும், உலகில் நூதனமானவைகளை அறிந்து கொள்ள வேண்டும், புதிய காரியங்களை செய்ய வேண்டும், உங்கள் வாழ்க்கையை உலக போக்கின்படி மாற்றிக் கொள்ள வேண்டும்" என்று தொனிக்கும் பல சத்தங்களை கேட்டிருக்கலாம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே, தம்முடைய சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்பும் போது, "ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன் ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்." என்று கூறினார். வசீகராமாக வஞ்சிக்கும் உலக பேச்சுக்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவை "புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கதாவும" இருக்கும். இயேசுவின் வார்த்தை எங்களிலும் நாங்கள் இயேசுவிலும் நிலைத்திருப்பதே எமக்குரிய தேறுதலைக் கொடுக்கக்கூடிய வலையம் (comfort Zone) என்பதை ஒரு போதும் மறந்து போய்விடாதிருங்கள். அதற்கு வெளியே இருந்தால் சீக்கிரமாய் இயேசுவிடம் திரும்புங்கள். அதை செய்தால் பாவமா? இதைப் பார்த்தால் குற்றமா? அதைத் தொட்டால் அசுத்தமா? என்று பலர் கேள்விகளுக்கு மேல் கேள்விகளை கேட்கின்றார்கள். நாங்கள் அறிந்து கொள்ள வேண்டிய காரியமாவது "தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய்" கூறப்படும், சொல்லப்படும், செய்யப்படும் எல்லா காரியங்களும் ஈற்றிலே எங்களை படுகுழியில் விழச் செய்துவிடும். கொஞ்சக் காலம் இந்த பூமியிலே வாழ்கின்ற நாங்கள், உலகத்திலே பல காரியங்களை கற்கின்றோம், கேட்கின்றோம், பார்க்கின்றோம். ஆனால் அவைகள், நீங்கள் பெற்றிருக்கும் அதி உன்னதமான அழைப்பின் மேன்மையை உணரமுடியாமல் உங்கள் மனக்கண்களை இருளடையச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். கறை படுத்தாதபடிக்கு தேவனுடைய சித்தம் உங்களுடைய வாழ்க்கையில் நிறைவேறுவதற்கு தடையாக இருந்தால், அவைகளை விட்டு விலகுங்கள்.

**பிலிப்பியர் 2:15**

**கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்றபிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,**

**ஜெபம்**: சகலவித ஆறுதலின் தெய்வமே, இந்த உலகத்தின் வஞ்சனைக்குத் தப்பி, உம்முடைய வார்த்தையின்படி வாழும்படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழைப்பின் மேன்மை

பதின்மூன்று வயதையுடைய சிறுபையன், ஒரு நாள் தன் தந்தையாரோடு பட்டணத்திலுள்ள கடைக்கு சென்ற போது, அவ்விடத்திலே, இசைக் கருவிகள் விற்கும் கடையொன்று புதிதாக போடப்பட்டிருப்பதை அவதானித்தான். அந்தக் கடையின் காட்சி ஜன்னல் வழியாக அங்கே ஒரு கிற்றார் வைத்திருப்பதைக் கண்டு மிகவும் பரவசம் அடைந்தான். எப்படியாவது அந்த கிற்றாரை தனதாக்கி கொள்ள வேண்டும் என்று தன் மனத்திலே நிச்சயித்துக் கொண்டான். வீடு திரும்பியதும், அந்த கிற்றாரை தனக்கு வாங்கித் தரும்படியாக தன் பெற்றோரிடம் வருந்தி கேட்டுக் கொண்டான். இப்போது வாங்கி தருவதற்கு எங்களிடம் பணம் இல்லை. உன் பாடங்களை ஒழுங்காக படி, வீட்டு வேலை களிலே கவனமாக இரு, அதன்பின் கிற்றாரை குறித்து பார்க்கலாம் என்று கூறினார்கள். அன்றிலிருந்து அவன் தன் பாடங்களிலே மிகவும் கவனமாக இருந்து வந்தான், வீட்டு வேலைகளை சீக்கிரமாய் முடித்துக் கொண்டான். தனக்கு பிறந்த நாளுக்கு, கிறிஸ்மஸ் புதுவருடத்திற்கோ எந்த பரிசுப் பொருளும், புத்தாடைகளும் வேண்டாம், அதற்கு பதிலாக அந்த கிற்றாரை வாங்கி தாருங்கள் என்று கூறி தனக்கு கிடைக்கும் சில்லறைப் பணத்தையும் சேமிக்க ஆரம்பித்தான். அந்த கிற்றாரை பெற்றுக் கொள்ளும்வரைக்கும் அவன் ஓய்ந்து போகவில்லை. ஏனெனில் அது அவன் இருதயத்தின் பொக்கிஷமாக இருந்தது. அந்த சிறுபையனின் பரவசத்தையும், சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் எண்ணிப் பாருங்கள். மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், **தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று**, அதைக் கொள்ளுகிறான் என்று பரலோக ராஜ்யத்தைக் குறித்து இயேசு ஒரு உவமையைக் கூறினார். இந்த உலகிலே வாழும்வரை அந்த சிறுபையனுக்கு இருந்த கடமைகளைப் போல எங்களுக்கும் நாளாந்த கடமைகள் இருக்கின்றது. அந்த கிற்றாரைப் பெற்றுக் கொள்வதற்கு தன் வாழ்விலே எந்த தடையையும் அவன் வைத்துக் கொள்ளவில்லை. அது போலவே, பரலோக ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நாங்களும் எங்கள் இருதயத்தின் பொக்கிஷமாக அதை மாற்றிக் கொள்ள வேண்டும்.

**மத்தேயு 13:46**

**அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்.**

**ஜெபம்:** பரலோக தந்தையே, பரலோக ராஜ்யத்தை சுதந்ததிரித்துக் கொள்ளும்படிக்கு நீர் எங்களுக்கு கொடுத்த மேன்மையான அழைப்பை கருத்தோடு காத்துக் கொள்ள உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

உள்ளான மனிதன் மாதாந்த இலவச பிரதி

# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் **FULL NAME:**

முகவரி **ADDRESS:**

நகரம் **CITY:**

மாநிலம் **PROVINCE:**

தபால் குறியீடு **POSTAL CODE:**

## மேலதிக விபரங்கள்

**whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

**Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:** ______________________

**மின் அஞ்சல் E-MAIL:**

______________________________________________

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE-MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9
www.gtachurchnet.ca ☎ 416.613.2909